987

# கொங்கு மலர்




13 AUG 1935

ஆண்டுக்கட்டணம் ரூ. 1—8—0.

தனிப்பிரதி அணா 0—2—0

# கொங்கு மலர்

கோவைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

| மலர் உ | யுவ-ஆண்டு<br>சித்திரைத் திங்கள். | இதழ் க |
|---|---|---|

உள்ளுறை.

| | | | பக்கம். |
|---|---|---|---|
| | பழனி | (படம்) | |
| 1. | கடவுள் வணக்கம் | (செய்யுள்) | 1 |
| 2. | பழைய பாட்டு | ,, | 1 |
| 3. | வேனிற்காலம் | ,, | 2 |
| 4. | மனமகிழ்ச்சி | ,, | 3 |
| 5. | பண்டைய சரித்திரம் | | 5 |
| 6. | நாடகத்தமிழ் | | 8 |
| 7. | திருநள்ளாறும் சனிப்பேர்த்தியும் | | 13 |
| 8. | புதுவை ஆனந்தரங்கப் பிள்ளை | | 18 |
| 9. | குன்றுதோருடல் ஓதிமலை | | 23 |
| 10. | கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள் | | 26 |




பழனி லக்ஷ்சுமி நாராயண சுவாமி கோயில்.



பழனிக்கருகிலுள்ள பெரியாவுடையார் கோயில்.

# கொங்கு மலர்.

மலர் 2. யுவ-ஆண்டு இதழ் க.
சித்திரைத் திங்கள்.

## நமது தாள்.

### இரண்டாவது ஆண்டு மலர்.

கோவைத் தமிழ்ச்சங்கம் என்னும் பூங்காவில் பல ஆண்டுகளாக சொற் பொழிவுகள் முதலான பல அருமையான செடிகொடிகள் வளர்ந்து தமிழ் மணம் தந்துகொண்டிருந்தன. ஆனால் வெகு ஆண்டுகள் பூக்கள் பூக்காமல் அவ்வனம் சோபை தரவில்லை. அப்படியிருக்க கலைமகள் கருணையினால் சென்ற ஆண்டில் அன்பர்கள் நெஞ்சில் உதித்த ஓர் அரும் பூஞ்செடியில் கொங்கு மலர் ஒன்று பூத்து விரிந்து முழுமணம் நாடெங்கும் தெரித்து இன்பம் தந்தது. அம்மலரின் பன்னிரண்டு இதழ்களும் பற்பல மணம் கமழ்ந்த வரிகளைக்கொண்டு இலங்கின. ஓவியங்கள் அவ்விதழ்களை அலங்கரித்தன. பழைய பாக்களும் புதுப் பாக்களும் மணத்திற்கு ஒத்து இசைபாடின. ஆராய்ச்சியுரைகளாகிய இனிய வண்ணங்கள் இதழ்களை அழகு படுத்தின. அத்தன்மைய மலர் விரிந்து உலகினர்க்கு ஆனந்தத்தைத் தந்து பரிமளித்து வந்தது.

அவ்வரும் பூஞ்செடியில் இரண்டாவது மலர் இப்பொழுது பூக்கத் தொடங்கிவிட்டது. யுவ-ஆண்டு சித்திரைத் திங்கள் முதல் நாளில் இரண்டாவது மலரின் முதல் இதழ் விரிந்து நிற்கும். முந்திய மலரைப்போன்றே இம்மலரும் வரிகள், வண்ணங்கள், இசைகள் முதலியன பெற்றிருக்கும். இதழ்களுக்குப் புதியதோர் வண்ணத்தைத் தர ஒரு அழகிய வெளிப் போர்வையுருவமும் அமைக்கப் பெற்றிருக்கிறது. இம்மலர் பல தமிழ் அன்பர்களுக்குத் தமிழ் மணத்தை ஊட்டி அவர்கள் மனத்தில் இன்புறுத்துமாக!

சென்ற ஆண்டு மலர் போதிய உருவத்தையும் அழகையும் மணத்தையும் பெற்றிருந்தும், அதனில் மொய்க்கவேண்டிய வண்டுகள் மொய்க்க வரவில்லை. வந்த வண்டுகளிலும் பொன் வண்டுகள் மிகக் குறைவே. கலைமகள் கருணையால் இவ்வாண்டு மலரை மொய்க்க நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் வண்டுகள் வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வண்டுகளில் பெரும்பான்மையோர் பொன் வண்டுகளாக இருத்தல் வேண்டும் என்று வேண்டப்படுகிறது. இவ்வாண்டு மலர் ஆயிரக்கணக்கான வண்டுகளை இழுக்கும் தன்மை பெறுவதற்காகப் பல அழகுகளைக் கொள்ளும்படி வசீகர முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பெறுகின்றன. இம்முயற்சிகளில் பல அன்பர்களும் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வண்டுகள் மலரை அடைந்து அதன் கண் பெறும் மணத்தையும் மதுவையும் மகரந்தத்தையும் அடைவதற்குச் செய்யக்கூடிய ரீங்காரம் மிகச் சுலபமானதே. ஆண்டு ஒன்று ரூ. 1—8—0 பொருமான ரீங்காரம் செய்தால் போதுமானது. அத்துணை ரீங்காரத்திற்கு அளவிலாத இன்பமதுவை அடையலாம். நமது தமிழ் மக்கள் இச்சிறிய உதவி புரிந்து பெரிய ஊதியத்தை அடைவார்களாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கொங்கு மலர் ஆசிரியர் கழகம்.

---

## சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்

சென்ற ஆண்டு கொங்கு மலரைப்பெற்று வந்த நண்பர்கள் நாளது வரையில் சந்தாத்தொகை ரூ. 1—8—0 அனுப்பாதிருக்கும் பட்சத்தில் கூடிய சீக்கிரத்தில் அதனை அனுப்பி உதவிபுரிவார்களாக. அடுத்த யுவ ஆண்டு சந்தாத்தொகையும் முன்பணமாக அனுப்பினால் பேருதவியாக இருக்கும். என்று அறிவிக்கின்றோம்.

சோ. த. ச.

# செய்யுட் பகுதி.

## கடவுள் வணக்கம்.

வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும்
அல்லாத சாதிகளும் அங்கபுல்மேற் கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணாவே.

திருநணா—திருஞானசம்பந்தர் தேவாரம்.

## பழைய பாட்டு.

### கொங்கு நாட்டில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்திகள் செய்த முதல் விஜயம்.

பாவிஅப் பதிகத் திருக்கடைக்காப்புச் சாத்திமுன்
பணிந்(து) அருள் பெற்றுக்
காவில்அன் பர்கள்தங் கூட்டமுந் தொழுது
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய ஈங்கோய் மலைமுத லாக
விமலர்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை அணிதிருப் பாண்டிக்
கொடுமுடி அணைந்தனர் கொங்கில்

(செ. 85)

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க்
கொடுமுடிக் கோயில்முன் குறுகிச்
சங்கவெண் குழையர் உழைவலஞ் செய்து
சார்ந்தடி அன்பினில் தாழ்ந்து

பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது
புனிதர்பொன் மேனியை நோக்கி
"இங்கிவர் தம்மை மறக்கவொண்ணு"தென்
றெழுந்தமெய்க் குறிப்பினில் எடுப்ப

(செ. 86.)

"அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம
அஞ்செழுத் தறியஎப் பொழுதும்
எண்ணிய நாவே இன்சுவை பெருக
இடையரு தியம்பும்" என் றிதனைத்
திண்ணிய உணர்விற் கொள்பவர் "மற்றுப்
பற்றிலேன்" எனச்செழுந் தமிழால்
நண்ணிய அன்பில் பிணிப்புற நவின்றார்
நமச்சிவா யத்திருப் பதிகம்

(செ. 87.)
—ஏயர்கோன்கலிக்காம
நாயனார்புராணம்.
—பெரிய புராணம்.

புதுப்பாடல்

## வேனிற்காலம்.

1. நீர்விரும்பி நாள்முழுதும் சோர்வுபடும் வெயிற்காலம்
ஆர்வமொடு அருந்துமட்டும் வேர்வைமிகும் வெயிற்காலம்
2. தெங்கினிள நீர்விரும்பித் திரிதருமிவ் வெயிற்காலம்,
வெங்கதிர்செய் கொடுமையினுல் வெம்பிடுமெவ் விளநீரும்
3. சந்தனநற் றண்குழம்பு தனிற்றேயும் வெயிற்காலம்
வெந்தவுடல் தனிற்படுமுன் வெம்மையுறுஞ் சந்தனமும்
4. ஆலடியிற் கால்நடைகள் அசைபோடக் கோவலர்கள்
கோலநிழற் கீழிருந்து குழலூதும் வெயிற்காலம்
5. குளிர்தருவின் நிழல்தேடிக் களிகூறும் வெயிற்காலம்
வெளிப்போந்தால் விழிகூசும் வெப்பமிகும் வெயிற்காலம்

6. என்றுமுல வாதுலவும் யாறுகளும் நீர்வற்றிக்
குன்றுறையும் மிருகமெலாம் கீழிறங்கி வருங்காலம்.

7. மாலையிலே நீலநிற மாய்த்தோன்றும் மலைகளிலே
சோலைகளிற் றீப்பிடிக்கச் சுடர்தோன்றும் வெயிற்காலம்.

8. ஞாயிறுதன் செங்கதிரை ஞாலமெலாம் தான்பரப்ப
வாயுவொடு வருணனுமே போயொளிக்கும் வெயிற்காலம்.

9. நீர்வேட்கை யால் வருந்தி நெடுந்தூரஞ் சென்றிடுவோர்
சோர்வகலச் சாலைகளில் தோற்றியதண் ணீர்ப்பந்தல்

10. கண்டவுடன் ஆவலொடு சென்றங்குடித் தேசெல்ல
"சண்டாளன் உனக்கில்லையோ தண்ணீரென் றே" கூறி

11. ஆவென்று வந்தொரு அரிஜனனை வெருட்டியவன்
நாவெந்து போகாதால் நலங்காட்டும் வெயிற்காலம்.

அ. துரைசாமி பிள்ளை.

மொழி பெயர்ப்பு.

## மன மகிழ்ச்சி.

---

1. மனையின் மகிழ்ச்சிகள் இனிமையில் ருசிக்கும்
இனிமை யேயன்றி புனிதமும் உற்றிடும்
பகலை எழுப்பிடும் பகலைச் செலச்செயும்
ககனப் பனிபோய் காணிடும் அவைகள்.

2. உலகில் மகிழ்ச்சிகள் உண்டே எனினும்
அலகில் மோசமும் அமைந்தே உளதாம்.
அகமும் அமைதியில் ஆனந்த முற்று
மிகவே சாந்தமும் வாய்மையும் கொள்ளும்.

3. பருவத வெள்ளம் பலத்துடன் புரளும்
கருவம் பூண்டு கலங்கிடும் பயங்கரம்
ஆனால் யாறோ அமைதியில் உருண்டு
கானல் வழியே கலங்கா தோடும்.

4. வாழ்வின் அறங்கள் வாளொளி போன்று
தாழ்வின் முறுவலும் தளிரப் பரவும்.
அகமுமோர் தாரகை! அருகிட அதிகம்
ஆயிடும், அலதோ அகமுமோர் உடுதான்.

5. யாத்திரை செய்வோர் எழிலார் புண்ணிய
க்ஷேத்திரம் அடைதற் செல்லலும் வீணே.
மனைதன் புனிதமா மாட்சியில் க்ஷேத்திரம்
தனையே காணுதல் தகைமைத் தன்றோ.

6. ஊனக் கண்ணினால் உயர்ந்த தூரக்கம்
காணவும் இயலாக் காரணம் உண்டே.
ஆயின் உலகில் அன்பமர் குடும்பம்
ஈயும் தூரக்கத் தின்பம் முதற்கண்.

—கோவைக் கிழார்.

---

* Sir John Bowring எழுதின "Home Joys" என்பதின் மொழி பெயர்ப்பு. எதுகையும் ஆங்கிலச் செய்யுளை ஒத்து எழுதப்பட்டது.

# சரிதப் பகுதி.

## பண்டைய சரித்திரம்.

### அதிகமான்.

கிறிஸ்தாப்தத்தின் போது கொங்குநாட்டில் பல மன்னர்கள் வெவ்வேறு அரண்களைத் தலைமை நகர்களாகக் கொண்டு ஆண்டிருத்தல் வேண்டும். காவேரி நதிக்குக் கிழக்கே உள்ள பாகத்தைக் கீழைக்கொங்கம் என்று அழைக்கலாம். அப்பாகம் முழுவதும் வெகு நூற்றாண்டுகளாக அதிகமான் பரம்பரையினர் ஆண்டு வந்தார்கள். அவர்களுடைய தலைநகர் தகடூர் என்பது. அவ்வூர் தற்காலத்துத் தருமபுரி என்று அவ்வூர் ஆலயத்துக் கல்வெட்டுகளால் அறிவோம். அந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த அதிகமான் வம்சத்தினர் அவ்வூருக்குத் தெற்கேயுள்ள பிராந்தியத்தைத் தங்கள் ஆளுகைக்குள் உட்படுத்தியிருந்தார்கள். ஒரு காலத்தில் அவர்களுடைய அரசு தெற்கே நாமக்கல் வரைக்கும் எட்டியிருந்தது. நாமக்கல்லில் உள்ள பெருங்கற்குன்றில் இரண்டு கற்குகை ஆலயங்கள் இருக்கின்றன. அவை மகாவிஷ்ணுவின் ஆலயங்கள். இரண்டாவது குகையில் ஒரு கல்வெட்டில் அவ்வாலயத்திற்கு அதியேந்திர விஷ்ணுக்கிரகம் என்ற பெயர் இருந்ததாகக் கண்டிருக்கிறது. இதனால் இவ்வாலயம் அதிகமானால் ஆக்கப்பட்டது என்று அறியமுடியும். ஆகவே நாமக்கல் அதிகர்களுடைய ஆளுகைக்குள் இருந்தது என அறியலாம்.

இனி அதிகர்களைப்பற்றி அடிக்கடிப் பண்டைப் பாண்டியர்களின் சாசனங்களில் அறிகிறோம். அச்சாசனங்களில் அதிகர்களைக் கொங்குநாட்டு மன்னர்கள் என்றே காண்கிறோம். வேள்விக்குடிச்

சாசனத்தின்படி நெடுஞ்சடையன் பராந்தகன் என்ற பாண்டிய மன்னன் கொங்கு அரசர்களை ஓட்டினதாக அறிகிறோம். மற்றொரு சாசனத்தில் அப்பாண்டிய அரசன் தகடூர் அதிகமானை ஐயிரூர், புகலியூர், ஆயிரவேலி என்ற இடங்களில் வென்றதாகவும் காண்கிறோம். இது நடந்தது 8-வது நூற்றாண்டு. ஆகவே அதிகமானுடைய பரம்பரை 8 நூற்றாண்டுகளாக அரசு புரிந்திருக்கவேண்டுமென்று அறியலாம்.

அதிகமான் பரம்பரையில் சங்கத்தார் காலத்திலிருந்த முதல் அரசன் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன். இவன் கடையெழு வள்ளல்களில் ஒருவன். யுத்தத்தில் பேர்பெற்ற வீரன். பல பகை மன்னரைப்போரில் வெற்றி கொண்டவன். இவன் வீரர்கள் வகுப்பாகிய மழவர்களுக்குத் தலைவன். அதனால் இவன் ஆண்ட ஒரு பாகத்திற்கு மழகொங்கம் என்ற பெயரும் ஒருகாலத்தில் ஏற்பட்டது. இவன் தலைமையூர் தகடூர். இவன் மலை குதிரைமலை, சேரமானுக்கு ஒரு உறவினன். ஆகவே பனைமாலையை மாலையாகக் கொண்டவன். இவன் மகன் பொகுட்டெழினி.

இவ்வரசன் பல புலவர்களை ஆதரித்தான். இவனைப் புகழ்ந்து ஔவையார், பரணர், பெருஞ்சித்தரனார், பொன்முடியார் என்ற புலவர்கள் பாடியிருக்கின்றார்கள். ஒருகாலத்தில் ஒரு அருமையான கருநெல்லிப் பழத்தைத் தான் உண்பதற்குப் பதிலாக ஔவையாருக்குக் கொடுத்துப் பெரும் புகழைப் பெற்றான். பின்னொரு நாள் காஞ்சி நகரத்தில் ஆண்ட தொண்டைமான்களின் பகையின்றி அன்புபெற வேண்டி ஔவையாரைத் தூது விடுத்தான். கோவலூரை ஆண்ட மலையமான் திருமுடிக்காரியின் பேரில் போருக்கு எழுந்து அவனை வென்றான். அப்போரை வியந்து பரணர் பாடியிருக்கின்றார். அக்காலத்தில் சேரநாட்டில் சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறை என்ற ஒரு மன்னன் இருந்தான். முன் தோற்றுப் போனத் திருமுடிக்காரி சேரமானிடம் அடைக்கலம் புகுந்தான். சேரமான் கொல்லிநாட்டை ஆண்ட ஓரியின் மீது படையெடுத்தான். ஓரிக்கு உதவியாக அதிகமான் அஞ்சி சென்றான்.

அப்போது ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதிகமான் தோற்றுத் தன் நகரேர்க் கோட்டைக்குள் புகுந்தான். சேரமான் நகரை முற்றுகையிட்டான். அப்போது ஔவையார் அதிகமானைக் கடும் போர் புரியச்செய்து உற்சாகம் ஊட்டினாள். எனினும் அதிகமான் அப்போரில் விண்ணுலகடைந்தான். ஔவையார் அவனை மிகவும் பாராட்டி அவன் மகன் பொகுட்டெழினுக்குப் பட்டம் சூட்டி வாழ்த்தினாள்.

இவ்வதிகமானுடைய முன்னோர்கள் தேவர்களைப்போற்றி வழி பட்டு விண்ணுலகிலிருந்துக் கரும்பை மண்ணுலகிற்குக் கொண்டு வந்தனர் என்பர். ஆகவே, விவசாயக்கலையிலும் இவ்வம்சத்தார் மிகவும் வல்லவர்கள் என்று அறியலாம். ஆகவே அதிகமானுடைய பரம்பரையானது வெகு புராதனமானது என்று அறியலாம்.

—கோவைக் கிழார்.

# கலைப் பகுதி.

## நாடகத் தமிழ்

(மலர் 1, 308 பக்கத்தின் தொடர்ச்சி.)

கூத்து என்னும் பொருளடியாகப் பண்டைத் தமிழ்நூல்களில் பல குறிப்புகள் கிடைக்கின்றன. ஆனால் அவற்றுள் ஒரு சிலவே நாடகந் தழுவியனவாகக் கருதத்தகுவன. மற்றவை அபிநயத்தை யொட்டிக் கூறுவனவும், வரிக்கூத்து, குரவைக்கூத்து முதலிய வற்றை யொட்டிக் கூறுவனவுமாக உள்ளன.

சிலப்பதிகாரம் அரங்கேற்றுக் கதையில் ஆடலாசிரியன் இலக் கணங் கூறுமிடத்து.

இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து
பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க அறிந்தாங்கு

என்று இங்ஙனம் ஒரு குறிப்புக் காண்கின்றது. இதற்கு உரை கூறும் முறையில் அடியார்க்கு நல்லார் பொறுக்கு மணிபோலும் பல இனிய குறிப்புக்கள் தருகின்றார். அவற்றைப் பெரிதுந் தழுவி மேற்போந்த அடிகளைச் சிறிது ஆராய்வோம்.

இருவகைக் கூத்து என்பதை விளக்கப் புகுங்கால் பல்வேறு வகைக் கூத்துகளின் பெயரும் சிலவற்றின் இலக்கணமும் சிலவற் றின் உறுப்புக்களும் பிறவுங் காண்கின்றன. நாடக ஆராய்ச்சிக்கு அவை பயன்படுவது அநேகமாய் இல்லையெனினும் இதனைப்படிக் கும் அன்பர்களுக்குக் கூத்தெனுமடியாகத் தமிழ் நூற்கள் உணர்த் துவன இன்னவையெனக் கூறுவது குற்றமாகாதென ஈண்டுச் சிறிது தெரிவிக்கலாயினேன். அவையாவன:—

வசைக்கூத்து: இது நகைத்திறச் சுவையுடையது.

பல்வகை உருவமும் பழித்துக் காட்ட
வல்ல ஞதல் வசையெனப் படுமே

இதனை விதூடகக் கூத்தாகக்கொண்டு பின்வரும் விநோதக் கூத்துள் ஒரு உறுப்பாகக் கொள்ளுவாரும் உளர். இது வேத்தியல் பொதுவியல் என இருவகைப்படும். இவற்றுள் வேத்தியல், அரசருக்காடுங்கூத்து; அகக்கூத்தென்பார், பொதுவியல், எல்லோருக்கும் ஒப்ப ஆடுங்கூத்து; இதனைப் புறக்கூத்தென்பார்.

புகழ்கூத்து: இது தலைவன் தலைவியரைப் புகழ்ந்து கூறி ஆடுங்கூத்து.

சாந்திக்கூத்து: உற்பாத சாந்தியாக முருகவேள், கண்ணன் முதலிய தெய்வங்களை நோக்கி ஆடுங்குரவைக் கூத்தையே சாந்திக் கூத்தாகச் சிலர் கருதுகின்றனர். இதற்கு மற்ரேர் இலக்கணமுங் காண்கின்றது. அது வருமாறு:—

சாந்திக் கூத்தே தலைவ னின்பம்
ஏத்திநின் ருடிய ஈரிரு நடம் அவை:—
சொக்கம் மெய்யே அவிநயம் நாடகம்
என்றிப் பாற்படூஉம் என்மனர் புலவர்

இக்கூத்தின் உறுப்புக்கள் நான்கனுள் நாடகம் என்பதொன்றே கதை தழுவிவருவது, மற்றவை சுத்த நிருத்தம் முதலியவையாம்.

வென்றிக்கூத்து: பல்வகைக் கூத்தென்பதனை விளக்கப்புகுங்கால்,

பல்வகை யென்பது பகருங் காலை
வென்றி வசையே விநோத மாகும்

என்று ஓர் மேற்கோள் காண்கின்றது. ஈண்டுக்காணும் மூவகைக் கூத்தினுள்,

மாற்ரு ஞெடுக்கமும் மன்னன் உயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே

வசைக்கூத்து முதற்கண் கூறப்பட்டது. மூன்ருவது விநோதக் கூத்து:—

விநோதக் கூத்து வேறுயாருடைத்து
வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்.
விநோதக் கூத்தே விளம்புங் காலைக்
கொடித்தேர் வேந்தரும் குறுநில மன்னரும்
பகைவென் றிருந்தாங் காடுவ தென்ப.

இதனையே சிலர் வரிக்கூத்தென்றுங் கூறுவர்.

ஆரியக்கூத்து: ஆரியர் தழுவி வருங்கூத்து.

தமிழ்க்கூத்து: பாட்டும் இசையும் வடவெழுத்தொரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுபாடமைந்து மேல் ஆரியந்தமிழ் எனுப் இருவரையும் சேதம் என்னும் விலக்குறிப்புக் கள் பதிநான்கினுள் ஒன்று. பின்னர் விரித்துரைப்பாம்.

வரிக்கூத்து:

வரியெனப் படுவது வகுக்குங் காலைப்
பிறந்த நிலனும் சிறந்த தொழிலும்
அறியக் கூறி ஆற்றுழி வழங்கல்

இதற்குறுப்பாவது குரவைக்கூத்து.

குரவையென்பது கூறுங் காலைக்
காமமும் விறலும் எய்த உரைத்து
எழுவ ரெண்மரோன் பதின்மர் மங்கையர்
கைகோத் தந்நிலை மண்டில மாகக்
குரவை பாடி யாடுவ தென்ப

வரிக்கூத்து எட்டுவகையினதாம். இவ்வுறுப்புக்கள் ஓராற்ருன் நாடகப் பொருட்கும் பொருந்துதல் கூடுமெனவே அவற்றையும் சுருக்கிச் சொல்லிவிடுகின்றேன்.

கண்கூடு காண்வரி உள்வரி புறவரி
கிளர்வரி ஐந்தோ டொன்ற உரைப்பின்
காட்சி தேர்ச்சி எடுத்துக் கோளென
மாட்சியின் வரூஉ மெண்வகை நெறித்தே

*அவற்றுள்*

**கண்கூடு:** *பிரிய தரிசனம். அஃதாவது காட்சி. அஃது ஒருவர் கூட்டவன்றித் தானே வந்து நிற்கும் நிலைமை.*

கண்கூ டென்பது கருதுங்காலை
இசைப்ப வாராது தானே வந்து
தலைப்பெய்து நிற்குந் தன்மைத் தென்ப.

**காண்வரி:**

காண்வரி என்பது காணுங்காலை
வந்த பின்னர் மனமகிழ் வுறுவன
தந்து நீங்குந் தன்மைய தாகும்.

**உள்வரி:** *வேற்றுருக் கொண்டு நடித்தல்.*

உள்வரி யென்ப துணர்த்துங் காலை
மண்டல மாக்கள் பிறிதோ குருவங்
கொண்டுங் கொள்ளாதும் ஆடுதற் குரித்தே.

**புறவரி:** *தலைவனுடன் நெருங்காது புறத்து நின்று விளையாடுவது.*

புறவரி யென்பது புணர்க்குங் காலை
இசைப்ப வந்த தலைவன்முற் படாது
புறத்துநின் றுடி விடைபெறு வதுவே.

**கிளர்வரி:** *நடுநின்றார் இருவருக்கும் தூது சொல்லக் கேட்டு நிற்பது.*

கிளர்வரி யென்பது கிளக்குங் காலை
ஒருவர் உய்ப்பத் தோன்றி அவர்வாய்
இருபுற மொழிப்பொருள் கேட்டு நிற்பதுவே.

**காட்சிவரி:** *தன் வருத்தத்தைப் பலருங்காணும்படி நடித்தல்.*

**தேர்ச்சி வரி:** *நாயகனது கிளைகட்குத் தன் துன்பங்களைத் தேடித் தேடிச் சொல்லுதல்.*

கெட்டமாக்கள் கிளைகண்டவர்முன்
பட்டதுமுற்றதும் நினைஇ இருந்து
தேர்ச்சியோ டுரைப்பது தேர்ச்சிவரி யாகும்

எடுத்துக்கோள்வரி: தான் மயக்கமெய்தி விழுந்தாளாக வீழ்ந்து பிறர் எடுத்துக்கொள்ளும்படி நடித்தல்

எடுத்துக் கோளை இசைக்குங் காலை
அடுத்தடுத் தழிந்து மாழ்கி அயலவர்
எடுத்துக்கோள் புரிந்த தேடுத்துக் கோளே.

இவ்வரி யென்பதனைப் பல்வரிக்கூத்தென்பார். கீழ்வரும் கலிவெண்பாவால் தொண்ணூற்றாறுவகைக் கூத்துக்களைக்குறிக்கின்றார்.

சிந்துப் பிழுக்கை யுடன்சந்தி யோர்முலை
கோந்தி கவுசி குடப்பிழுக்கை—கந்தன்பாட்
டாலங்காட் டாண்டி பருமண னெல்லிச்சி
சூலந் தருநட்டந் துன்ரடிலுடன்—சீலமிகும்
ஆண்டி யமண்புனவே டாளத்தி கோப்பாளி
பாண்டிப் பிழுக்கையுடன் பாம்பாட்டி—மீண்ட
கடவுட் சடைவீர மாகேசங் காமன்
மகிழ்சிந்து வாமன ரூபம்—விகடநேமே
பத்திரங் கோற்றி பலகைவாள் பப்பரப்பேண்
டத்தசம் பாரம் தகுணிச்சங்—கத்து
முறையீண் டிருஞ்சித்து முண்டித மன்னப்
பறைபண் டிதபுட்ப பாண—மிறைபரவு
பத்தன் குரவையே பப்பறை காவதன்
பித்தனோடு மாணி பெரும்பிழுக்கை—எத்துறையு
மேத்திவருங் கட்களி யாண்டு விளையாட்டுக்
கோத்த பறைக்குடும்பு கோற்கூத்து—மூத்த
கிழவன் கிழவியே கிள்ளுப் பிருண்டி
அழகுடைய பண்ணிவிக டாங்கந்—திகழ்செம்போன்
அம்மனை பந்து கழங்காடல் ஆலிக்கும்
விண்ணகக் காளி விறற்கோந்தி—அல்லாத
வாய்ந்த தனிவண்டு வாரிச்சி பிச்சியுடன்
சாந்த முடைய சடாதாரி—ஏய்ந்தவிடை
தக்க பிடார் நிர்த்தந் தளிப்பாட்டுச் சாதுரங்கம்
தொக்க தொழில்புனைந்த சோணண்டு—மிக்க.

—பண்டிதர் S. ஐயாசாமி பிள்ளை.

(தொடரும்.)

# சமயப் பகுதி.

## திருநள்ளாறும் சனிப் பேர்த்தியும்

திருநள்ளாறு என்ற பேரைப்பார்த்ததும் காவேரியாறு—நொய்யலாறுபோல அதுவும் ஒரு ஆறு என்று நம் நண்பர்கள் எண்ணக்கூடும். அந்த ஆறு — நதியல்ல. அது ஒரு ஊருக்குப்பெயர். இவ்வூர் சோழ நாட்டில் இருந்தது. ஆனல் சோழநாடு என்ற பிரிவு இப்போது இல்லை. தஞ்சாவூர் சில்லா — திருச்சினப்பள்ளி தென்ஆற்காடு சில்லாக்களில் சிலபாகம் சேர்ந்த ஒரு பிரதேசம் தான் முன் சோழநாடு என்று இருந்தது என்று பொதுவாய் எண்ணுகின்ரேம். திருநள்ளாறு இந்த ஜில்லாக்கள் எதிலும் இல்லை. நமது காருண்ய ஆங்கிலேய அரசாங்கத்திலேயே அது இல்லை. முன் இருந்த சோழ அரசாங்கமும் வேண்டாம். இப்போது உள்ள காருண்ய ஆங்கிலேய அரசாங்கமும் வேண்டாம் என்று அது பிரஞ்சு அரசாங்கத்துக்குள் போய்ப் புகுந்துகொண்டது. இல்லை. இல்லை. அந்த ஊர் இருந்த இடத்திலேதான் இருக்கிறது. ஆனல் பிரஞ்சு அரசாங்கம் அதில் வந்து புகுந்துகொண்டது. அது மாயவரத்திலிருந்து தென்கிழக்காய்ச் சுமார் 20 நாழிகை தூரத்தில் உள்ளது. மாயவரத்திலிருந்து திருவாரூர் போகும் புகைவண்டிப் பாதையில் பேரளம் என்று ஒரு சந்திப்பு நிலயம் (Junction) உண்டு அதில் இறங்கி அங்கிருந்து காரைக்கால் போகும் பாதையில் அது இருக்கிறது. காரைக்காலுக்கு 3 மையிலில் உள்ள நிலையம் இதுதான். ஆனல் இரயில்வேக்காரர் இந்தப் பேரைத் திருநலார் (Tirunalar) என்று திருத்தி அச்சுப்போட்டிருக்கிருர்கள். இரயில்வேக்கரர் திருத்துப்பாட்டுக்குத்தான் கேள்வியுமில்லை முறையுமில்லையே. "திருவாரூர்" கொஞ்ச காலத்திற்கு முன்வரை "திருவாலூர்" என்று இருந்தது. அதிலும் பிர

ஞ்சுகாரர்களுக்கு அழுத்தமும் வலிமையும் ஆகாது. மலையாளத்தை விட அதிக மெலிமையாய் அனேகமாய் மூக்கின் வழியாகக் கொஞ் சங்கூட நெஞ்சிலும் உதட்டிலும் படாமல் பேசுவார்கள். ஆகையால் கள்ளாறு என்பதில் ள் என்ற அழுத்தையும் று என்ற வல்லெழுத் தையும் ஆகாதென்று தள்ளிவிட்டு "திருநலார்" என்று போட்டு விட்டார்கள். அது எப்படியோ இருக்கட்டும். இந்த ஊருக்கு இரயில் வழியாய்ப்போய் வருவதற்குள் நாங்கள் பட்டபாடு அள வேயில்லை. அதிலும் அந்தப் "பேரளம்" என்ற சந்திப்பை நினைத் தால் இப்போதுகூட மனசு நடுங்குகிறது. அந்த இரயில் வண்டி களும் அவைகளில் சனங்கள் படுகிறபாடும் போகும் போது வரும் போது "கஸ்டம்" என்று காரணப் பேர்பூண்ட ஒரு வகுப்பார்கள் படுத்துகிற பாடும் அப்பா! போதும்! என்று யாருக்கும் மூச்சுப் போய்விடும். கஸ்டத்துக்காரர்களின் நாற்புறமும் அடைத்த இருட்டறைக்குள் ஒருவன் மூட்டை முடுச்சுக்களையும் துணிகளை யும் அவிழ்த்து முற்றப்பரிசோதிக்கப்பட்டு சிறு துவாரத்தில் வெளி யேறுவதற்குள் தாய் வயற்றிலிருந்து பிறந்த மறு சென்மந்தான்.

"தக்க தசமதி தாயொடு தான்படும்
துக்கசாகரத் தொல்லையிற் பிழைத்தும்"

என்று மாணிக்க வாசகர் அருளிய துக்கசாகரத்தொல்லை இதற்குக் கொஞ்சமும் ஈடாகாது. இந்த நிலையத்துக்கு விளங்கும் "பேரளம்" என்பது "பேரிழவு" என்பதன் மருவுப்பேராகுமோ என்றுகூட இலக்கணம் படித்தவர்கள் ஆலோசிக்கிறார்கள்.

2. சனிப்பேர்த்தி: சனிக்கு ஒரு பேர்த்தி உண்டுபோலும் —அவருக்கு எத்தனை மக்கள்— எத்தனை பேரன்மார் என்று ஒரு வேளை நமது கொங்கு நாட்டு நண்பர்களும் "நண்பி"களும் நினைக் கலாம். (நண்பனுக்குப் பெண்பால் நண்பி என்றிருக்கவேணும். ஒருவேளை இலக்கணத்தவறாயிருந்தால் வித்வான்கள் மன்னிக்க வேணும்.) அது பேத்தியுமல்ல— பேரனுமல்ல. சனிக்குக் கல் யாணமாயிருக்கிறதோ என்றுகூடத்தெரியாது. சனி என்பது மனிதர்களை ஆட்டுவிக்கும்—ஏன்?—தேவர்களையும் நரகர்களையும் —மற்ற அண்டர்களையும்—கூட ஆட்டுவிக்கும்—ஒன்பது கிரஹங்

கள் என்ற கூட்டத்தில் ஒரு பெரிய ஆள். அவருக்கு கால் கொஞ்சம் ஊனம் உண்டாம். அதனல் அவர் மெல்ல நடந்துபோவார். அதனுல்தான் அவருக்கு வடமொழியில் "சனைஸ்வரன்" மெல்ல நடக்கிறவர்—என்று காரணப்பேர் கொடுத்திருக்கிருர்கள் என்று புலவர்கள் பேசிக்கொள்ளுகிருர்கள். அதாவது ஆகாய வீதியிலே பன்னிரண்டு வீடுகள் உண்டு. இவைகளுக்கு இராசிகள் என்று பேர். இந்த கிரஹங்கள் நம்மைப்போல் ஒரே வீட்டில் இருக்காமல் எப்போதும் ஒரு வீட்டிலிருந்து இன்னெரு வீட்டிற்குப் போய்க் கொண்டேயிருப்பார்கள். சர்க்காரும் சமீன்களும் பணக்காரரும் ஏழைகளும் மலைக்குப் போகிறதுபோல இவர்களுக்கும் ஏதோ அந்தந்த வீட்டில் காரியம் உண்டுபோலும். ஆனல் எல்லா கிரகங்களும் ஒன்றுபோல் நகர்வதில்லை. வியாழன் என்றவர் ஒரு வீட்டிற்கு ஒருவருஷம் வீதம் இருப்பார். பனிரண்டு வீட்டையும் ஒரு முறை சுற்றிவர 12 வருஷங்களாகும். அந்தக்கணக்கை வைத்துத் தான் நமது சட்டங்களிற்கூட 12 என்று ஒரு பெரிய காலவரை லிமிடேடின் போட்டிருக்கிருர்கள் போலும். ஆனல் சனி ஒவ்வொரு வீட்டிலும் 2½-வஷ இருந்துதான் அடுத்த வீட்டிற்குப் போவார். அவர் பூந்தால் அந்த வீட்டை விட்டுச் சீக்கிரம் போகிறதில்லை. சில சமயங்களில் முன் வீட்டையும் பின்வீட்டையும் சேர்த்தி 7½ வருஷம் பிடித்துக்கொள்ளுவார். இதற்குத்தான் ஏழரைநாட்டுச்சனி என்று சொல்வார்கள். இந்த விவரங்களை எல்லாம் சனிபிடித்த கணக்கர்களையும் சோசியர்களையும்தான் கேட்க வேணும். பேர்த்தி என்ருல் பேர்கிறது பெயர்கிறது—ஒன்றிலிருந்து மற்ெருன்றிற்குப் போகிறது என்று அர்த்தம். இது நல்ல தமிழ்மொழி. பேர்—என்றது தி—என்னும் விகுதிபெற்று பேர்த்தி என்று ஆயிற்று. பேர்தலாகிய தொழிலைக்குறிக்கும் தொழிற் பெயர் என்று கூறுவர். இலக்கணம் படித்தோர் சனி ஒரு வீட்டிலிருந்து அடுத்த இன்னெரு வீட்டிற்குப் பேர்ந்துபோகும் நாளைத்தான் சனிப்பேர்த்தி—சனிப்பெயர்த்தி என்று சொல்வது. இது கொங்கு நாட்டில் அதிகமாக வழங்குவதில்லை. தஞ்சாவூர் சில்லாவில் அதிகமாக வழங்குவது அந்த சில்லாவில் இதற்கு இத்தனை வியாக்கியானம் எழுதவேண்டியதில்லை. சென்ற மாசி-மீ 5-உ

சனிக்கிழமை (16—2—35) யன்று சனி மகர வீட்டிலிருந்து கும்ப வீட்டிற்கு நகர்ந்து போனார். பஞ்சாங்க பேதத்தால் இந்த நாளும் கொஞ்சம் நகர்ந்து சில பஞ்சாங்கப்படி மாசி-மீ 6-உ ஞாயிற்றுக்கிழமை நகர்ந்தார். இன்னும் சில பஞ்சாங்கங் களின்படி சில மாதங்களின் முன்பே நகர்ந்து விட்டார் என்று சிலர் கூறுவர்.

3. எப்படியானாலும் சென்ற பிப்ரவரி 16, 17 தேதிகளில் திருநள்ளாற்றில் சனிப்பேர்த்தித்திருவிழா வெகுவைபவமாகக் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்குக் கணக்கில்லை. இரயிலிலும் நளன் குளத்திலும் அந்தச்சின்ன ஊரிலும் கோயிலுக்குள்ளும் அதி லும் "பகவான்" (சனிபகவான்) சந்நிதியிலும் பலகாரக்கடைகளி லும் ஒருவர் மேல் (தோளின்மேல் தலையின்மேல் கூட) ஒருவராக காசில்லாமல் இடமில்லாமல் சோறு தண்ணீராமல் சனங்கள் படும் கஷ்டத்தின்போது சனிவிட்டவர்கள் தான் இங்கு வந்தார்களா சனி தொட்டவர்கள் தான் இங்கு வந்தார்கள். சனிவிட்டும் விடாத வர்களா? என்று சந்தேகப்படவேண்டியதுதான். சனிப்பேர்த்தி திருநள்ளாற்றில் வெகு விசேஷம் ஏன்? நளச்சக்கிரவர்த்தி இந்த தலத்தில் சிவபெருமானைப் பூசித்தபின்தான் அவரைப் பிடித்த கலி நீங்கிற்று என்று சரித்திரம் கூறுகிறது. அதனாலே இவ்வூருக்கு நள் ளாறு என்று பேராயிற்று என்றும் சொல்வர். நளதீர்த்தம் என்று ஒரு குளமும் ஊருக்கும் கோயிலும் வடமேற்கில் ஒரு சிறு குள மிருக்கிறது. யாருக்குச்சனி பிடித்தாலும் விட்டாலும், அந்தக் குளத்திலிருக்கும் லட்சக்கணக்கான மீன்களுக்கு ஒவ்வொரு சனிப் பேர்த்தியிலும் சனிபிடித்தது என்பது நிச்சயம். ஒரு 50, 60 ஆயிரம் சனங்கள் ஒரேநாளில் அக்குளத்தில் எண்ணெய் தேய்த்து (சனியை விட்டு முழுக்குப் போடவேண்டுமல்லவா. எள் + நெய் = எண்ணெய். எள் சனிக்குரிய தானியமன்றோ?) க்குளித்தால் சிறுகுளம் என்ன ஆகும். ஆயினும் அந்தத்தண்ணீர் வெகு சுத்த மென்றே சொல்ல வேண்டும். மறுநாள் ஆயிரக்கணக்கான கருட பகவான்களுக்கும் மனித பகவான்களுக்கும் பகவான் கருணையினால் பலத்த விருந்துதான்.

இந்தத்தலத்திலே சனி பகவானை யார் வணங்குச் சுவாமியை அடைகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் சனி எல்லாம் நன்மையே தரவேண்டும் என்று நளச்சக்கரவர்த்தி நமக்காக முன்னமே வரம் கேட்டு வாங்கிக் கொடுத்திருக்கிறார். இது வெறும் புராணக்கதை என்று நினைக்க வேண்டாம். இது முழுதும் உண்மையே: இது உண்மை என்பது சனிப்பேர்த்திக்குத் திருநள்ளாறு போனவர்கள் கண்டகாட்சி உணர்த்தும். திருநள்ளாறு காரைக்காலுக்கு 3 மைலில் இருக்கிறது என்று சொன்னேன். பிரிடிஷில் சனிபிடித்தவர்கள் காரைக்காலுக்குப்போவார்கள் என்பது உலகப்பிரசித்தமல்லவா. சனிவருவதற்காகவும் கொடுமை செய்யாது நன்மை செய்வதற்காகவும் பிரிடிஷ்க்காரரும் பிரஞ்சுக்காரரும் கூடித்திருநள்ளாற்றுக்கு வந்து தரிசிப்பார்கள்.

சனிப்பேர்த்தியன்று பகவானுக்குத்திருவிழா. சனிபகவான் முத்துப் பல்லக்கில் வெள்ளை—வெள்ளிக்காக்கை வாகனத்தில் எழுந்தருளி எண்ணில்லாத அடியார்களுக்குக் காட்சி கொடுத்து அருள் செய்கின்றார். பகவான் மூலஸ்தானம் நள்ளாறப்பர் கோயில் முன் வாசலில் வடபுறம் இருக்கிறது.

திருநள்ளாறுக்கு வடமொழியில் தர்ப்பாரண்யம் என்று கூறுவர். தர்ப்பை அந்த ஸ்தல விருட்சம். சுவாமியின் தீர்த்தத் தொட்டியின் வடபுறம் ஒரு தருப்பைத்தூறு எப்போதும் இருக்கும். நளதீர்த்தக்கரையில் உள்ள காசித் துண்டி விநாயகர்—காலபைரவர்—கோயிலில் உள்ள காசிக் கங்கைக்கிணற்றுக் கரையிலும் ஒரு தருப்பைத்தூறு எக்காலத்தும் இருக்கும். சனிப்பேர்த்தியன்று இந்த இரண்டு தருப்பைத்தூறுகளுக்கும் பெரிய அவஸ்தைதான். அவற்றில் உள்ள ஒரு இலை தவராமல் வருகிறவர்கள் எல்லாம் முடிப்புகள் முடிந்துவிடுகிறார்கள். இலை ஒன்றுக்கு அநேக முடிப்பு விழுந்துவிடும். தர்ப்பைத்தூறு படும்பாடு சொல்லமுடியாது. சனங்கள் தங்கள் சனியைத் தருப்பையில் முடிந்து விடுவதாகக் கருதுகிறார்கள் போலும். ஸ்தல விருக்ஷமாகியும் புண்ணியம் செய்த ஆத்மாவாகவும் உள்ள அந்தத் தருப்பைச் செடியைச் சுற்றி வந்து தூரத்தேயிருந்து வணங்கி அதன் நன்மையை அடையாமல் அதற்குத்தாங்கள் செய்யும் உபத்திரவத்தால் வரும் பாவத்தை நினைத்துப் பார்க்க இந்த அடியார்களுக்கு நேரமிருந்தால் இனிமேற் செய்யமாட்டார்கள்.

C. K. சுப்பிரமணிய முதலியார்.

# ஆராய்ச்சிப் பகுதி.

## புதுவை ஆனந்தரங்கப் பிள்ளை.

(378-பக்கத் தொடர்ச்சி.)

ஆநந்தரங்கப்பிள்ளை ஒவ்வொரு நாளும் வைகறையிலேயே துயிலுணர்ந்தெழுந்து காலைக்கடனை முடித்து ஸ்நாநஞ்செய்து சூரிய நமஸ்காரஞ் செய்வது வழக்கம். காலை 8-மணிமுதல் 11-மணிவரை அரசாங்கத் துறையிலும் வியாபாரத் துறையிலும் தான் செய்ய வேண்டியவற்றைக் கவனித்தல்; பகற் போசன முண்டபின்னர்ச் சிறிதிளைப்பாறியவுடன் தனக்கு வரும் கடிதம் முதலியவற்றைக் கவனித்தலும் தானெழுதவேண்டிய நிருபங்களை யெழுதுதலுமாகிய வேலையிலமர்தல்; பிற்பகல் நான்கு மணிக்குமேல் தன்னுடைய நந்தவன நடுவண் உள்ள வசந்த மண்டபமடைந்து தன்னுடைய நண்பர்களோடும் சுற்றத்தார்களோடும் களித்து மகிழ்ந்துரையாடி யிருத்தல் ஆகிய இவற்றைத் தனது பிரதிதின வாழ்க்கை முறையாகத் தவறாமல் அநுஸரித்து வந்துள்ளான். நான்கு மணிமுதல் ஏழு மணிக்குள்ளான அமயமே வடமொழி தென்மொழி தெலுங்கு சங்கீதம் முதலியவற்றில் தேர்ச்சியடைந்த வித்துவான்களோடும் பல வாத்தியங்களிற் கைதேர்ந்தவர்களோடும் ஸல்லாபஞ்செய்ய அவனுக்கு அவகாசமுண்டு. ஆடல் பாடல்களில் வல்ல கணிகையர் தம் பரதம் பார்ப்பதில் அவனுக்கு மிகவும் பிரியமென்று அவன் பரம்பரையோர் கூறுவர். புலவராதியோர்க்குப் பரிசளிக்கும் அமயமுமிதுவே.

இவன் நற்கொடை வள்ளல் என்ற புகழ்மொழி நாடெங்கும் பரக்கவே, நாற்றிசையினுமுள்ள இரவன்மாக்கள் பலரும் பழுமரஞ் சேர் பறவையினமென இவனை யண்முவாராயினர். "கள்வன் நொண்டிச்சிந்து" என்னுஞ் சிறுநூலில், கள்வன் ஆநந்தரங்கப் பிள்ளை தானதர்மங்களிற் சிறந்தவனாகையால் அவன் வீட்டிற்

கன்னமிட்டுக் களவு செய்தல் அடாதென்று கூறி, அவன் பக்கத்து வீட்டு லோபியொருவன் வீட்டிற் கன்னம்வைப்பதே தன்னுடைய தொழிலுக்கும் தனக்கும் பெருமையென்று கூறுமிடத்தில், 'ஆநந்த ரங்கதுரை தான தர்மம், சொல்லப்போமோ அதை வெல்லப் போமோ,'' என்று கூறியிருப்பதை நோக்குமிடத்து இவனது வள் ளற்றன்மையைப் பாமரரும் அறிந்துள்ள விடயத்தைப் புலவர் விள க்குவது நன்கு தெரியவரும்.

நான் கடலூரில் இருந்த காலத்தில், கல்லாடம் முதல் முப்ப தேழு அகவல்களுக்கு மயிலேறும் பெருமாள்பிள்ளை யுரையோடு ஏனைய அகவல்களுக்குத் தமது பத்துரையுஞ் சேர்த்து முதன் முதல் அச்சிட்டு வெளிப்படுத்திய புதுவை க. சுப்பராய முதலியார் அவர்கள் வீட்டிற் சில அச்சிற்கு வாராத ஏட்டுப்பிரதி நூல்கள் இருப்பதாகக் கேள்வியுற்று, யான் புதுவைக்குச் சென்றேன். அங்கு இலக்கண விளக்க ஆசிரியராகிய வைத்தியநாத தேசிகரியற் றிய "மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ்'' முதலிய சில நூல்கள் கிடைத் தன. அங்கு வேறெவரிடத்தேனும் அச்சுக்கு வாராத பழைய நூல் கள் இருக்குமோ என்று எனது நண்பர் சிலரை விசாரித்த காலத் தில், ஸ்ரீமான் ரங்கப்பிள்ளையவர்கள் வீட்டில் விசாரித்தால் ஒருகால் இருக்கலாமென்று கூறினர். சென்று பார்த்த பொழுது, ரங்கப் பிள்ளையின் பரம்பரையில் வந்தவராகிய ஸ்ரீ திருவேங்கடம் பிள்ளை யென்பவர், ரங்கப்பிள்ளை காலத்திலிருந்து சேமித்துப் போற்றிவந்த பல ஏடுகளைக் கொணர்ந்து தந்து, இவைகளை எக்காலத்திலும் எடுத்த வருமில்லை பார்த்தவருமில்லை; இவை தமக்கு எவ்விதத்தாலும் உப யோகமற்றுக் கிடப்பதால் யாரேனும் தமிழ் தெரிந்தவர்களிடம் கொடுத்துவிடலாமென்று கருதியிருந்தாகக் கூறிப், பார்த்த பின்னர் பயன்படுமென்று கருதினுல் அவற்றை யெடுத்துக்கொள்ளலாமென் றும் அநுமதி தந்தனர். மேலும், ரங்கப்பிள்ளை அவர்கள் எழுதித் தோல் பைண்டு செய்து வைத்திருந்த தினசரிப் புத்தகங்களையும் பார்க்க அநுமதி தந்தார். சில தினங்கள் அங்கிருந்து, தினசரியிற் குறித்துள்ளவற்றை யாங்காங்குப் படித்துப் பார்த்தேன். அக் காலத்தில் ரங்கப்பிள்ளையின் வீடு முழுவதுஞ் சுற்றிப்பார்க்கவும்

அவகாசமிருந்தது. அப்பொழுது திருவேங்கடம்பிள்ளை, பெரிய சித்திரமெழுதிய அழகிய படமொன்றைக் காட்டி, இஃது ஆநந்த ரங்கப்பிள்ளையின் திருவுருவப்படமென்று கூறினர். அது பழைய படமாயிருப்பினும் நல்ல ரூப லக்ஷணமுள்ள ஒரு யௌவன புருஷ னின் படமாக இருந்தது. அதைப்பற்றிப் பின்வரும் வரலாற்றை யும் அவர் கூறினர்.

ஆநந்தரங்கப்பிள்ளை மிகுந்த செல்வாக்கிலிருந்த காலத்தில், ஒரு வருஷந்தென்னாட்டில் விளைவு குன்றிப் பஞ்சம் நேரிட்டது. அப்பொழுது புதுவையில் அரிசி விலை மிகவும் ஏறிவிட்டது. இதை யுணர்ந்த பிரஞ்சு ஐரோப்பிய வியாபாரி யொருவன் வேற்றிடங்களி லிருந்து ஒரு பெரிய கப்பல் நிறைய அரிசி யேற்றிக்கொண்டு புது வையில் நல்லலாபங்கிடைக்குமென்று துறைமுகத்தைச்சேர்ந்தான். அவ்வமயம், உள்ளூர் வியாபாரிகள் வேறு பல பிரதேசங்களிலிருந்து ஏராளமான அரிசி தருவித்த காரணத்தால் அரிசி விலை திடீரென்று மிகக்குறைந்துவிட்டது. அச்சந்தர்ப்பத்தில், ஐரோப்பிய வியா பாரி மிகவருத்தமடைந்து இன்னது செய்வதென்று தெரியாமல் தத்தளித்தான். ஊர் விலைக்கு விற்றால் அவன் மிகுந்த நஷ்ட மடைவான் என்பதற்கு ஐயமில்லை. அவன், ரங்கப்பிள்ளையிடம் இதைத் தெரிவித்த போழ்து அவன் சிறிது யோசித்துப் பிறகு அந்தக்கப்பல் அரிசி முழுவதையும் எந்த விலைக்கு விற்றால் கை நஷ்டம் உண்டாகாதென்பதைத் தெரிந்துகொண்டு, அஃதெல்லா வற்றையும் தானே அந்த விலை கொடுத்து வாங்கி விட்டனன். ஐரோப்பிய வியாபாரிக்கு ரங்கப்பிள்ளையிடம் உண்டான கௌரவ புத்திக்கும் மகிழ்ச்சிக்கும் எல்லையில்லை. அவன் எவ்விதத்திலா யினும் ரங்கப்பிள்ளைக்குத் தன் நன்றியைக் காட்டவேண்டுமென்று தீர்மானித்தனன். அவன் சித்திரமெழுதுவதிற் கைதேர்ந்தவனா யிருந்ததால், ரங்கப்பிள்ளைக்குத் தெரியாமலே அவனைப்போன்ற பெரிய உருவப்படமொன்றை யெழுதி ரங்கப்பிள்ளையின் படுக்கை யறையில் நிலைக்கண்ணாடி யிருந்த விடத்தில் அதைவைத்து விட்ட னன். அன்றிரவு ரங்கப்பிள்ளை படுக்கைக்குப்போகும்முன் நிலைக் கண்ணாடியைப் பார்க்கவும். அப்பொழுது சட்டை தலைப்பாகை

யின்றித் தானிருக்கவும் எதிரில் சட்டை தலைப்பாகையோடு தன்னுருவம் காணப்படுவதைக் கண்டு பிரமித்துச் சிறிதுநேரம் நின்றுவிட்டுப் பிறகு தன்னுடைய உருவப்படமென்பதை யுணர்ந்து, அதனை யாவர் அங்குக் கொணர்ந்து வைத்தனர் என்பதை விசாரித்து, அங்ஙனஞ் செய்தவர் ஐரோப்பிய வர்த்தகரென்பதைத் தெரிந்துகொண்டனன். உடனே அவ்வர்த்தகரை வரவழைத்து மகிழ்வுடன் ஏராளமான பரிசிலளித்தனுப்பினன். இஃது அவன் உருவப்படத்தைப்பற்றிய வரலாறு.

பின்னர் அங்குக்கிடைத்த ஏடுகளை ஆராய்ந்து பார்த்ததில், அவ்வக்காலங்களில் ஆநந்தரங்கப்பிள்ளையைப் பார்த்துப் பரிசில் பெற வந்த புலவர்கள் பாடிய பல தனிப்பாடல்களும், 'ஆநந்தரங்கன் கோவை' எனப் பெயரிய நூலொன்றும், 'ஆநந்தரங்க சந்தஸ்' என்ற தெலுங்கு யாப்பிலக்கண நூலொன்றுங் காணப்பட்டன. ஸ்ரீ திருவேங்கடம்பிள்ளை இறுதியிற் கூறிய ஆநந்தரங்க சந்தஸை யொரு தெலுங்கு வித்துவானிடமே கொடுக்கக் கருதியிருப்பதாகக் கூறினமையின் அஃது அவரிடமே திருப்பிக் கொடுத்துவிடப் பட்டது.

இனி முதற்கண், பல புலவர்கள் ரங்கப்பிள்ளையைப் பாடிய பாடல்கள் சிலவற்றை யீண்டுக்கூறுவல்.

ஆநந்தரங்கப்பிள்ளையின் பிதாவாகிய திருவேங்கடம்பிள்ளைமீது தொண்டை மண்டலம் நமச்சிவாயப் புலவர் பாடியது. இப்புலவர் சீதக்காதி முதலிய வள்ளல்களையும் பாடியவர்.

"விதுவை யம்பதி யோசையைப் பேரிக
விகையொ னும்மதன் வில்லில்வண் டேற்றினன்

மதுவை யம்பதி வேகமொ டெய்திரு
வலய மீதுகை வைக்கவென் னுள்ளமோ

குதுவை யம்பதி ஞாலும் புகழ்பெறுங்
குமணன் கன்னன் கொடைகளை மாற்றிய

புதுவை யம்பதி வேங்கட ராயன்பாற்
புகலிவ் வேளையி லென்றன்கைப் பூவையே.''

[விது—சந்திரன். அம்பதி யோசை—கடல் முழக்கம். விது கவிகை, அம்பதி யோசை பேரி எனக் கூட்டுக. எதிர் நிரனிறை. வண்டாகிய நாணையேற்றினான் என்க. குவலயம்—நீலம். வையம்—உலகம். பூவை—நாகண வாய்ப்புள். இஃது பூவை விடு தூது.]

இந்நமச்சிவாயப் புலவரே ஆநந்தரங்கப்பிள்ளையினைப் பாடியது.

''பாரார் சொல்லார் பறவைக் குலங்கடம்மிற்
சீராருங் கிள்ளைமுதற் செப்பலால்—ஓரா
யிரம் பையா னந்தரங்கன் இன் ப ர ங் க ன் அன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்.''

(தொடரும்.)

ந. பலராம ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், 'செந்தமிழ்க் கழகம்',
கோயமுத்தூர்.

---

**திருத்தம்:** கொங்கு மலர் க. பக்கம் 378 வரி 32-ல் C. V. என்பதை C. S. என்று திருத்திக்கொள்ளவும்.

# குன்றுதோருடல்.

## ஓதிமலை.

இம்மலை அவிநாசி தாலூக்காவில் பவானி நதிப் பள்ளத்தாக்கில் அந்நதிக்குத் தென்பாகத்தில் சுமார் மூன்று மைல் தூரத்தில் உள்ள ஒரு செங்குத்தான தனிமலை. இம்மலையின் உருவம் ஒரு பம்பரத்தைப் பருத்தபாகம் கீழும் நுனிபாகம் மேலும் இருக்கும்படி வைத்தாற்போல இருக்கும். மலையில் மரஞ்செடி அதிகமாக இராததினால் மலை ஏறுவது மிகவும் கடினம். முற்காலத்தில் கட்டியிருந்த படிகள் அநேகம் சரிந்துபோய் விட்டன. பொதுமக்கள் இப்போது அப்படிகளை சீர்திருத்தி வருகிறார்கள். மலையின் உயரம் கடல் நீர் மட்டத்திற்கு மேல் **2157** அடி உள்ளது. அடிவாரத்திலிருந்து ஏறும்பாதை சுமார் ஒருமைல் இருக்கலாம்.

இம்மலைக்கு அடுத்து முக்கால் மைலில் உள்ள ஊர் இரும்பரை என்பது. சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள ஊர் கணுவக்கரை என்பது. இக்கணுவக்கரையில் கண்ணுவ மகரிஷியின் ஆசிரமம் இருந்ததாகவும் அதனால் அவ்வூருக்கு கண்ணுவக்கரை என்று பெயர் வந்ததாகவும் சொல்லுவார்கள். அவ்வூர் ஆசிரமத்திலிருந்து கண்ணுவ ரிஷி ஓதிமலை முருகக் கடவுளை தரிசித்து வந்ததாகவும் கூறுவர். ஊரார் புரிந்துவந்த அக்கிரமச் செயலைக்கண்டு கண்ணுவரிஷி சபித்ததாகவும் அதனால் அவ்வூர் சீர்கெட்டுப்போய் கொலைகளுக்குக் காரணமாக இருப்பதாகவும் கூறுவர்.

முருகக் கடவுள் பிரம்மதேவனை பிரணவத்தின் பொருள்கேட்க அவன் சொல்லமாட்டாததினால் அவனைச் சிறையில் இட்டார் என்றும், பிறகு ஈசனார் முருகக் கடவுளையே பிரணவத்தின் பொருளைக் கேட்க அவர் அதை உபதேசித்ததாகவும், அவ்வாறு உபதேசத்தை இம்மலையில் ஓதினதினால் இம்மலைக்கு ஓதிமலை என்று பெயர் வந்தது என்றும் சொல்லுவார்கள்.

ஓதி என்ற பதத்திற்கு அறிவு, அறிவுடையோன் இடங்கழிமை, ஓந்தி, கல்வி, ஞானம், பூனை, பெண்மயிர், போர், மலை,

என்ற பொருள்கள் உண்டு. இந்தப்பொருள்களில் எந்தப்பொருளைக் கொண்டு இம்மலைக்குப் பெயர் வந்ததோ தெரியவில்லை. ஆனால் இம்மலை முருகக் கடவுள் மீது திருப்புகழ் அருளிச்செய்த அருண கிரிநாத சுவாமிகள்.

"ஓதியிணர்த்திக் குகைக்கி டுங்கன
காபர ணத்திற் பொருட் பயன்தரு
ஊதிகிரிக்குட் கருத்துகந்தருள் பெருமாளே."

என்று கூறியிருப்பதனால் அதில் ஓதி என்பது ஓதியமரம் அல்லது உதியமரம் என்ற பொருள் இருப்பதனாலும், இம்மலையில் ஓதிய மரம் விசேஷமாக இருந்ததினாலும், இதற்கு ஓதிமலை என்ற பெயர் வந்திருக்கலாம். ஆனால் திருப்புகழைப் பதிப்பித்த திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இம்மலையை ஊதிமலை என்று அச் சடித்திருக்கிறார்கள். ஆனால் இங்கே வழக்கத்திலுள்ளது ஓதிமலை என்பதுதான்.

இம்மலைக்கு ஒருபுராணமும் பலபிரபந்தங்களும் இருப்பதாகச் சொல்லுவார்கள். அவை எட்டுப்பிரதி அளவில் இருக்கின்றனவாம். பலபெயரை விசாரித்துப் பார்த்தும் யாதொன்றும் கிடைக்கவில்லை. இம்மலைக்கு இரண்டு திருப்புகழ்கள் உண்டு

ஆதிமக மாயி யம்பை தேவிசிவ னார்ம கிழ்ந்த
ஆவுடைய மாது தந்த குமரேசா—
ஆதரவ தாய்வ ருந்தி யாதியரு ணேச ரென்று
ஆளுமுனை யேவ ணங்க அருள்வாயே;
பூதமது வான வைந்து பேதமிட வேய லைந்து
பூரணசி வாக மங்க ளறியாதே—
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநி னைந்து
போகமுற வேவி ரும்பு மடியேனை;
நீதயவ தாயி ரங்கி நேசவரு ளேபு ரிந்து
நீதிநெறி யேவி ளங்க வுபதேச—
நேர்மைசிவ னார்தி கழ்ந்த காதிலுரை வேத மந்த்ர
நீலமயி லேறி வந்த வடிவேலா;

ஒதுமறை யாக மஞ்சொல் யோகமது வேபு ரிந்து
    ஊழியுணர் வார்கள் தங்கள்    வினைதீர—
ஊனுமுயி ராய்வ ளர்ந்து ஒசையுடன் வாழ்வு தந்த
    ஊதிமலை மீது கந்த    பெருமாளே.

கோதி முடித்துக் கனத்த கொண்டையர்
    சூது விதத்துக் கிதத்து மங்கையர்
    கூடிய அற்பச் சுகத்தை நெஞ்சினில்    நினையாதே—
  கோழை மனத்தைக் கெடுத்து வன்புல
    ஞான குணத்தைக் கொடுத்து நின்செயல்
    கூறு மிடத்துக் கிதத்து நின்றருள்    புரிவாயே;
நாத நிலைக்குட் கருத்து கந்தருள்
    போதக மற்றெச் சகத்தை யுந்தரு
    நான்மு கனுக்குக் கிளத்து தந்தையின்    மருகோனே—
  நாடு மகத்தெற் கிடுக்கண் வந்தது
    தீரிடு தற்குப் பதத்தை யுந்தரு
    நாயகர் புத்ரக் குருக்க ளென்றருள்    வடிவேலா;
தோதிமி தித்தித் திமித்த டிங்குரு
    டீகுகு டிக்குட் டிகுக்கு டிங்குரு
    தோதிமி தித்தித் தனத்த தந்தவெ    னிசையோடே—
  சூழ நடித்துச் சடத்தில் நின்றுயி
    ரான துறத்தற் கிரக்க முஞ்சுப
    சோபன முய்க்கக் கருத்தும் வந்தருள்    புரிவேனே;
ஓதவெ ழுத்துக் கடக்க முஞ்சில
    காரண பத்தர்க் கிரக்க முந்தகு
    ஓமெ னெழுத்துக் குயிர்ப்பு மென்சுட    ரொளியேனே—
ஓதி யிணர்த்திக் குகைக்கி டுங்கன
    காபர ணத்திற் பொருட் பயன்றரு
    ஊதிகிரிக்குட் கருத்துகந்தருள்    பெருமாளே.

மேலும் இம்மலை முருகக் கடவுளைக் குறித்து விளாங்குறிச்சி வி. ந. மருதாசலக் கவுண்டர் மும்மணிக் கோவை, சந்தப் பதிகம், திருப்புகழ்ப் பதிகம், கும்மி, காவடிச்சிந்து, குமர தேசிகமாலை முதலிய பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றார்.

—கோவைக்கிழார்.

# ஒழிவு.

## கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள்.

### பேளூர் ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் ஆலயம்:

ஹொய்சள அரசர்கள் வாதாபிசாளுக்கிய வேந்தர்கட்கும், தலைக்காடு கங்கமன்னர்களுக்கும் திறை செலுத்தும் சிற்றரசர்ளாக விருந்தனர். இவர்கள் சிற்றரசர்களெனினும், தமது குடிகளின் விருப்பத்திற்கேற்ற உதவிகளைத் தாராளமாகச்செய்து அவர்கள் பேரன்புக்குப் பாத்திரர்களாக விளங்கினர். ஹொய்சளர்கள், தர்மகைங்கர்யங்களைச் செய்வதிலும்; அதிலும் சிற்பம் நிறைந்த சித்திரக் கோவில்களை எல்லையற்ற பொருள் செலவில், நீண்டகால முயற்சியில் நிர்மாணிப்பதிலும் முதன்மையாக விருந்தனர். இவ்வுண்மைக்கு இப்பொழுது மைசூர் இராஜ்யத்தில் கண்விருந்தாக விளங்கும் பேளூர் ஸ்ரீ சென்னகேசவர்; ஹளபீட் ஸ்ரீ ஹொய்சளேஸ்வரர்; சோமநாதபுரம் ஸ்ரீ சுந்தரகேசவர்; தோட்ட கட்டப்பல்லே இலட்சுமி கோவில் முதலிய ஆலயங்களே போதிய சான்றாம். சித்திர காட்சிகளுக்கும், சிற்பவிற்பனங்கட்கும், இழைப்புச் சித்திரங்களுக்கும், மதிலோவியங்களுக்கும் வைப்புநிதியாக விளங்கும் மேற்காட்டிய ஆலயங்களை, கண்பெற்றார்களும்; சிற்பக்காட்சிகளைக்கண்டு மகிழ்வதிலேயே விருப்பமிக்கவர்களும், இன்றே சென்று காண்பார்களாக.

#### இடமும் வழியும்.

பேளூர் என்பது, மைசூர் மாகாணம் ஹாஸன் ஜில்லாவில் பெரியதோர் தாலூக்கா. இப்பொழுது பிரதான பட்டணமாகவும் விளங்குகிறது. இது-பெங்களூர்-பூனா ரயில் இருப்புப் பாதையில்

"பெரிய வாணுவர்" ரயில் நிலயத்திலிருந்து 28 மைல் தூரத்தில் இருக்கிறது. மற்ருேர் வழி மைசூர் அரிசிக்கரை ரயில் மார்க்கத்தில் "ஹாஸன்" என்னும் பெரிய ரயில் நிலயத்திலிருந்து 24 மைல் தூரத்திலுள்ளது.

## திருப்பணி செய்த அரசனும்—தலத்தின் சிறப்புப் பெயர்களும்.

ஹொய்சள விஷ்ணு வர்த்தனமன்னன் இப்பேளூர் நகரை கி. பி. 1123 ஆம் ஆண்டில் தனது ஆளுகைக்கு இராஜதானியாகச் செய்துகொண்டு அதிகாரம் நடத்திவந்தான். இத்திருநகரை, கன்னட தேசத்து மக்களும், ஹொய்சள அரசரது பிரஜைகளும் ஒரு புண்ணிய க்ஷேத்திரமாகக் கருதிப் போற்றிவந்தார்கள். மேலும் இதனை, "தக்ஷிணகாசி" (தக்ஷிணவாரணசி) என்றும், "அபினவ க்ஷோணிவைகுண்டம்" என்றும்; "திரிலோக மகாஸ்தானம்" என்றும் மக்கள் பெயரிட்டழைக்கின்றனர். இப்பெயர்கள், இத்தலத்திற்குப் புராண மூலமாக உண்டானவை. ஹொய்சள மன்னனது வைணவ பக்தியின் மிகுதியினலேயே ஸ்ரீ சென்னகேசவ தேவாலயம் சிற்பக்காட்சிகளுக்கு ஓர் வைப்புநிதிபோல் விளங்குவதற்காயிற்றென்று கூறலாம்.

## மூர்த்தியின் பெயரும், திருவாயில்கள் தீர்த்த முதலியனவும்.

பேளூர் தலத்திலுள்ள ஸ்ரீ சென்னகேசவர் என்னும் பெயரிய திருமால்கோயில், கிழக்குத் திக்கைநோக்கி இருக்கிறது. இத்திருவாலயத்திற்கு அரணுக அமைந்துள்ள நாற்புறமும் கூடிய பிராகாரச்சுவர்கள் 443 அடி நீளமும், 396 அடி அகலமும் உடையன. ஆலயத்தின் முன்வாயில் இரண்டு. ஒன்றுக்குப் 'பெரிய திருவாயில்' என்றும்; மற்ருென்றுக்கு "கஜத்துவாரம்" (யானைவாயில்) என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன. பெரிய திருவாயிலின்மீது அழகிய கோபுரம் ஒன்று கட்டப்பட்டுப் பார்வைக்கு அழகாகவிருக்கிறது. இக்கோபுர வாயில்வழியாகவே யாத்ரீகர்கள் சென்று திருமாலைச் சேவித்து வருகின்றனர். கஜத்துவாரம் என்ற தலைவாயில் தற்போது முழுதும் மூடப்பட்டிருக்கிறது.

பிரதான ஆலயத்தைச் சூழ்ந்து சிற்றாலயங்களும், மண்டபங்களும், வாகனச் சாலைகளும், யாகவேதிகைகளும், மற்றும் பல கட்டிடங்களும் இருக்கின்றன. ஆலயத்தின் இடதுபாகத்தில் ஓர்மூலையில் "வாசுதேவ தீர்த்தம்" என்ற திருக்குளம் இருக்கிறது இதுநாற் சதுரவடிவில் அமைந்தது. தேவகாரியங்களுக்கு வேண்டிய தீர்த்தம் இத்திருக்குளத்திலிருந்தே உபயோகிக்கின்றனர். இத்திருக்குள மின்றி "யகஸே" என்ற பெயரிய நதியொன்றும் இத்தலத்தில் உள்ளது.

## இரண்டாம் திருவாயிலும்—அதன் அழகு அமைப்பு முதலியனவும்.

இரண்டாம் பிரகாரத்திலுள்ள திருவாயில், பேரழகும், நல்லமைப்புமுடையது. இதன் வாயிற்படிக்கு ஏழுசோபானங்கள் அதாவது அழகியபடிக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. வாயில்மேல் நிலையில் அதாவது பார்வைப்பலகையில், கருடாழ்வார் உருவம், சிற்பமுறையையும், ஐதீகத்தையும் தழுவி இரண்டு பக்கத்திலும் யானைகள் தங்கள் துதிக்கைகளைத்தூக்கிச் சாமரை போடுவதுபோல் நன்றாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. யானைகளுக்கும் கருடாழ்வார் உருவங்களுக்கும் இடையிலும், பக்கவாட்டுகளிலும், பல்வேறு சித்திரக்கொடிகள்—இலைகள், மலர்கள், கனிகள் முதலியன நேர்த்தியாகவும், நுட்பமாகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. திருவாயிலின் இருபுறங்களிலும் சிறிதும் பெரிதுமான நான்கு சித்திரத் தூண்கள், போதிகைகள் அழகும் அமைப்புமாய் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தூண்களின் மத்தியில் துவாரபாலகர் உருவங்கள் சித்தரிக்கப்பட்டு அழகான தோற்றத்துடன் விளங்குகின்றன. திருவாயிலின் நிலையைச்சார்ந்த வெளிச்சுவர்கள் மீது நீளத்தில் இருபாதியாகப் பிளந்த நான்கு சித்திரத்தூண்கள் போதிகைகளுடன் சித்தரிக்கப்பட்டும், எஞ்சிய இடைவெளிகள் முழுதும், அற்புதச்சித்திரங்கள் சிற்றுளிகளின் திறமை விளங்கச் செதுக்கப்பட்டும் காண்போர் கண்களுக்கு நல்விருந்தாக்கப்பட்டுள்ளது. திருவாயிலின் திருப்படிகளின் தொடக்கத்தில் இருபாரிசத்திலும் பதினறு இதழ்வடிவில் நேர்த்தியான பல கொத்துவேலைகளுடன் உச்சியில் நேர்த்தியான கலசங்களுடன் இரண்டுகல் இரதங்கள் அற்புதமாய் அலங்கரித்து

நிறுத்தப்பட்டிருக்கின்றன. அடிதளத்தின் இறுதிப் பாகத்தில், யானை உருவங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து செல்வது போல் சித்திரித்திருப்பது வியத்தற்குரியதே. இம்மாதிரியான திருவாயில் அமைப்பு, தென்னிந்தியா க்ஷேத்திரங்களில் எங்குமே யில்லையென்பது உறுதியாகக் கூறலாம்,

இது மட்டுமா? திருவாயில் மண்டபத்து பக்கவாட்டுச்சுவர்கள் முழுதும் இடைவெளியின்றிச்சித்திர நுட்பங்கள் நிரம்பிய சிலைகளும், கொடிகளும், மாடங்களும், விமானங்களும் கண்கவர்வளப்புடன் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. உத்திரமட்டம் வரையிலும் அதன் விளிம்புகளிலும் அவற்றிற்கு மேல் அமைக்கப்பட்டுள்ள கொடுங்கைகளிலும் நேற்றிக்கோடுகளிலும் நுட்பமிக்க சிற்பச்செதுக்கவேலைகளே நிரம்பியுள்ளன. கைப்பிடிச்சுவர்களும், சுவர்களின் நான்கு மூலைகளில் சிங்க உருவங்களும், நடுப்பாகத்தில் பார்வைக்கு அழகாகத்தோன்றும்படி வளைவு விமானங்களும் நிருமாணித்து விமானத்தின் உட்பாகங்களில் விஷ்ணு லீலைகள் சம்பந்தமான திருவுருவங்கள் வெகு நேர்த்தியாகவே சித்திரிக்கப்பட்டு நேர்த்தியானந்த விளங்குகின்றன.

### மூலஸ்தானமும்—அர்த்தமண்டபத்தின் திருவாயில்களும்.

மூலஸ்தானம் கருங்கல்லினால் நன்றாகச் சதுரித்துச் சித்திரிக்கப்பட்ட மூன்றடி உயரமுள்ள அழகிய பெரியபீடத்தின்மீது நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. ஆலயத்தின் கீழமேல் 198 அடியும்; அகலம் தென்வடல் 156 அடியும் இருக்கின்றன. ஆலயத்திற்குத் திருவாயில்கள் மூன்று இவற்றில் பிரதானவாயில் போக வடக்கிலும் தெற்கிலுமாக இரண்டு வாயில்கள் அவ்வாயில்களுக்கு முறையே **"சுக்கிரவார** (வெள்ளிக்கிழமை) **வாயில்"** என்றும், **"சுவர்க்க வாயில்"** என்றும் பெயர்கள் கூறப்படுகின்றன.

### முதல் திருவாயிலும்—அதன் சித்திரங்களும்.

கிழக்கு நோக்கியுள்ள பிரதான கோபுரவாயிலின் மேல் நிலையிலும், கீழ்பாகத்திலும், இருபுறச்சட்டங்களிலுமாக நேர்த்தியான கொடிவகைகளும், மகரங்களும், சுராமீன்களுமுள்ள உருவங்களும்

நன்றாகச்சித்தரிக்கப்பட்டும், லட்சுமிப்பலகையில் கருட விக்கிரகமும், அநுமந்த உருவமும், இரதி மன்மதர்கள் — ஹிரண்யகசிபு வதம்—ஹிரண்யாகடிவதம் முதலிய வரலாறுகளும், சித்திரங்களாக அழகாகச் செதுக்கப்பட்டும் மேலான அழகுடன் விளங்குகின்றன உத்திரங்களிலும், போதிகைகளிலும் அளவற்ற சித்திரங்கள் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

## கர்ப்பக்கிரகமும்—வெளிச்சுவர்களின் ஓவியங்களும்.

மூலஸ்தானத்து வெளிச்சுவர்களின்மீது சித்திரிக்கப்பட்டிருக்கும் அற்புதமான நுட்ப சித்திரங்கள் அழகின் அவதாரங்களென்றும், சிற்பப் பொக்கிஷங்களென்றும், சித்திரக்காட்சிகளென்றும் கூறுவதைத்தவிர வேறு உபமானங்கூறச் சொற்கள் அகப்படவில்லை. தென்-வடல் பக்கங்களின் சுவர்களில் செதுக்கப்பட்டிருக்கும் சித்திரங்களில் பெரும்பாகம் விஷ்ணுவின் லீலா விநோதங்களென்றே கூறலாம். இரணிய சம்மாரம், கோதண்டபாணி, வேணுகானம் முதலிய சித்திரங்கள் குறிப்பிடத்தக்கன. இச்சிற்ப வுருவங்களுக்கு அமைக்கப்பட்டிருக்கும் பிரபாவளிகளும், மூர்த்திமாடங்களும், உள்ளிடங்களும், தூண் சித்திரங்களும் வெகு நுணுக்கமான சிற்பத்திறமையுடன் சித்திரிக்கப்பட்ட அற்புத சிருஷ்டிகளாம். பிரபாவளிகளிலும், மூர்த்திமாடங்களிலும், சித்திரத்தூண்களிலும், போதிகைகளிலும், கார்னீஸ்கரணைகளிலும் காணப்படும் சித்திரக்காட்சிகள் இயந்திரங்களின் உதவிகொண்டு செய்யப்பட்டனவோவென்று ஐயங்கொள்ளும்படியாகவும், பிரமிக்கத்தக்கதாகவுமிருக்கின்றன. சுவர்களில் அழகு பதியும்படி எடுக்கப்பட்டுள்ள கரணைகள் ஐந்துவரிசைகளிலும் மிகச்சிறிய சிற்றுளிகளைக்கொண்டு செம்மையாகச் செதுக்கப்பட்டிருக்கும் கொடிவகைகளும், யானை உருவங்களும், அன்னப்பட்சிகளும், யாளிசிங்க வடிவங்களும், வெள்ளி தந்தங்களின்மீது கைதேர்ந்த சிற்பவல்லார்கள் தங்கள் கலைத்திறமை விளங்கச் செய்த அற்புதங்களோ! வென்று வியந்து புகழ்ந்து அத்தகைய உயர்வுடையனவாக் காண்கின்றன. இத்தகைய அருமைச்சித்திரங்களைக் காண்பவர்கள் உண்மையிலேயே கண்பெற்ற பயனை அடைந்தவர்களாவரென்பது நமது அபிப்பிராயம்.

## கருப்பக்கிரகமும்—பின்பாகச்சிற்பங்களும்.

மூலஸ்தானத்தின் பின்பாகத்துச் சித்திரத்தோற்றம் மிகவும் அபூர்வமானது. ஹொய்சள வேந்தர்களுடைய ஆலயங்களில் உயர்நிலைபெற்றுள்ள மணிக்கொடிச்செதுக்குவேலைகளும், இழைப்புச் சித்திரங்களும், தூண்வரிசைகளின் அந்தமும், போதிகைகளின் கண்கவர் வனப்பும், கொடுங்கைகளின் சித்திர நுணுக்கமும், மேல்விதானங்களின் விசேடமும், ஓவியங்களின் ஒப்பற்ற அழகும், விமானத்தின் விந்தையும, அமைப்பின் அதிசயமும் ஆனந்திக்கக் கூடிய அற்புதவடிவங்களாம் அவ்வடிவங்களில் பிரதானமானவை இரதங்களைப்போன்ற மூன்று பெரிய விமானங்கள் இவ்விமானங்கள் இரண்டு அந்தஸ்துக்களைக் கொண்டவை. இரதவடிவுடைய விமானங்களின் உள்ளிடங்களில் மூன்று விஷ்ணு விக்கிரகங்கள் சித்திரித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. மூன்று விமானங்களும் மூன்று திசைகளை நோக்கிய வண்ணம் இருக்கின்றன.

இக்காலத்தில் போட்டோ சிரூப்—சினிமாக்கள் மூலம் எடுக்கும் படங்களையும், சிற்பசித்திரங்களையும், சித்திரக்கலையும், அறிவு நுட்பமும், ஓவியம் வரையும் வன்மையும் இல்லாதவன் எழுதும் சித்திரங்களையும் நீங்கள் மிகுதியாகக் கண்டுகளித்திருக்கலாம். சில ஓவிய வல்லாரால் தீட்டப்பட்ட சித்திரங்களையும், சிற்ப உருவங்களையும், நீங்கள் ஒருக்கால் பார்த்திருக்கக்கூடும். இவைகளை விட மனோபாவம் எண்ணத்திலுதித்து ஆனந்தத்தையுண்டாக்கும் ஓவியங்களையும், சமர்த்துவிளங்க, கைவன்மை ஓங்க, சிற்றுளியால் சிற்ப நலங்கள் சிறக்க, சித்தரித்துள்ள காட்சிகளை நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள். அவற்றைகாண விரும்பினல், நீங்கள் இன்றே பேளூர் சென்னகேசவர் திருவாலயத்தை நோக்கிச் செல்லுங்கள்.

ஓவியங்களையும், சிற்பங்களையும் ஓவிய நிபுணர் எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாகவும், இலகுவாகவும் தீட்டவும், செதுக்கவும் வல்லார்களோ! அவ்வளவுக்கவ்வளவு அவ்வோவியங்களும், சிற்பங்களும் மேன்மை பெற்றதாயிருக்கும். புராதன சிற்பிகள் வெகு காலத்திற்கு முன்னரே மேற் சொல்லிய உண்மைகளை நன்ருக யுணர்ந்திருந்தார்கள். இதற்கு பேளூர் கோயில் சிற்பங்கள் சிறந்த சான்ரும்.

பேளூர் சென்னகேசவர் சிற்பக்காட்சிகளையும், மதிலோவியங்களையும் பார்க்கப்பார்க்க நமக்கு, நமது பழைய சிற்பவல்லார்களின் வேலைப்பாடுகளும் அரசர்களின் ஆதரவும், மதப்பற்றும், கடவுள் பால் அவர்கள் கொண்டிருந்த மெய்யன்பும் தெளிவாகத் தெரியக் கட்டியதாயுள்ளன.

### மகாமண்டபமும்—சிற்பத்தூண்களும்.

இனி மகாமண்டபத்திற் காணப்படும் மதிலோவியங்களையும் அவற்றின் சிறப்புக்களையும் பற்றிக்கவனிப்போம். தேவர்திருக் கோட்டத்தின் உட்பாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாமண்டபத்தில் உன்னதமானதும், உயர்வுமிக்கதுமான நானாவிதச்சித்திரங்கள் நன்றாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தில் நிறுத்தப்பட்டுள்ள தூண்கள் யாவும் சுந்தரமிக்கச் சித்திரத்தூண்களே. இத்தூண்களைச் சிற்பிகள் தங்கள் முழுக்கவனத்தையும், அறிவையும் கைவன்மையும் கொண்டு அழகாகச் சித்தரித்து கண்விருந்தாகச் செய்து வைத்திருக்கின்றார்கள். உத்திரம், போதிகை, குறுக்குச் சட்டங்கள் அவற்றின் உள்ளிடங்கள் அனைத்திலும் சித்திரமாகவே இருக்கின்றன. சிற்பங்களும் சித்திரங்களும், ஒன்றுடனொன்று பிரிக்கமுடியாத தொடர்பில் அதற்குரிய கருத்துக்களோடு விளங்குகின்றன. இம்மகாமண்டபம் மிகவும் கம்பீரமாகவும், அலங்காரமாகவும் விளங்குவது விசேட பிரகாசத்தை விளக்குவதாயுள்ளது.

அங்குள்ள தூண்கள் அனைத்திலும் சிறப்பாக யாவர்மனத்தையும் கண்களையும் மயக்குவது "நரசிம்மத்தூண்" என்பது இச்சிற்பத்தூணில் நரசிங்கமூர்த்தியின் உருவம் அற்புத வடிவில் சித்தரிக்கப்பட்டிருப்பதே இப்பெயர்க்குக் காரணமாகும். இவ்வழகியதூண் அடிமுதல் நுனிவரையும், பிறபாகங்களும் புராண சம்பந்தமான உருவங்களே மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இந் நரசிம்மத்தூணை அழகுபெறச் சித்திரித்த சிற்பி மிகவும் திறமைவாய்ந்த மேதாவி யென்றே கூறவேண்டும்.

(தொடரும்.)

கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

# திங்கட் செய்திகள்.

திருப்பேரூரில் எப்பொழுதும் போலவே பங்குனித்திங்களில் பிரம்மோற்சவம் நடந்தது. 15—3—35-ல் ரிஷபவாகன உற்சவமும், 16—3—35ல் கல்யாண உற்சவமும் 19—3—35ல் தெப்போற்சவமும், 20—3—35ல் தரிசனமும் நடைபெற்றன. உற்சவ காலங்களில் தினந்தோறும் தேவாரப் பாராயணம் நடந்தது. சிதம்பரம் இராமலிங்க ஓதுவாரும் திருவீழிமிழலை சோமசுந்தர தேசிகரும் தக்க இசைகளுடன் தேவார பஜனை செய்தார்கள். அதுகாலை சேக்கிழார் தேவாரப் பாடசாலை மாணவ மாணவிகள் உடன் இருந்து பாடினார்கள். இப்பெரு முயற்சி திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டது. பங்குனி உத்திரத்தின்போது ஒரு மாட்டுச் சந்தையும் நடைபெற்றது.

* * *

21—3—35ல் கோவை பூகோளச் சங்கத்தின் ஆதரவின்கீழ் "பாய்கரை மின்சார திட்டம்" என்னும் பொருள் பற்றி பூதக் கண்ணாடிப் படங்களுடன் ஒரு விரிவுரை நிகழ்த்தப்பட்டது. மின்சார யந்திரங்களின் அமைப்பு, பயன் முதலியவைகளைப்பற்றி வெகு தெளிவாக உபந்நியாசகர் விவரித்தார்.

* * *

24—3—35ல் கோவைத் தேவாங்கச் சிறுவர் சபையின் 8வது ஆண்டு நிறைவு விழா சேலம் பாரிஸ்டர் S. V. ராமசாமி அவர்கள் தலைமையின்கீழ் நடந்தது. விளையாட்டுகளில் தேர்ந்தவர்களுக்குப் பரிசுகள் கொடுத்தபிறகு திரு. K. நஞ்சுண்டையா B.A., B. Com., B. L., அவர்கள் "சமூக ஸ்தாபனங்களும் பொருளாதார புனருத்தாரணமும்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். விழா வெகு விமரிசையாக நடந்தது.

* * *

6—4—35ல் Y. M. C. A. கட்டடத்தில் திரு. Y. D. ராஜாராவ் அவர்கள் "எழுத்தின் இலக்கணம்" என்னும் பொருள்பற்றி ஒரு ஆராய்ச்சியுரை நிகழ்த்தினார்கள். நன்னூல், தொல்காப்பியம் முதலிய சிறந்த இலக்கணங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டி வெகு தெளிவாக எடுத்துச்சொன்னார். அச்சமயம் நமது ஆசிரியர் தலைமை வகித்தார்.

Regd. No. M. 3087.

# பெரிய புராண

## உரை வெளியீடு.

படங்களுடன்.

### கோவைத் தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தினின்று திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., F. M. U., அவர்கள் எழுதிய உரையுடனும் பல பழயஏட்டுப் பிரதிகளைப் பரிசோதித்துப் பாடபேதங்கள் முதலியவற்றுடனும் பெரிய புராண உரை வெளிவரும். சஞ்சிகை ஒவ்வொன்றிலும் ஏறக்குறைய 400 திருப்பாசுரங்களுக்கு பதவுரை, குறிப்புரை, புராணச்சுருக்கும், மற்றும் தேவாரங்கள், உரிய பல கண்கவரும் படங்கள், பாராயணத்தில் நிறுத்துமிடம் முதலியவற்றுடன் உயர்ந்த தாளில் ராயல் சைசில் இதுவரை வெளிவந்துள்ள பதிப்புக்கள் யாவற்றினும் உயர்ந்த பதிப்பாக இறைவனருளைத் துணைக்கொண்டு வெளியிடப்பெறும். இவ்வாறு புராணம் முழுமையும் (10) அல்லது (11) சஞ்சிகைகளுள் முடிக்க உத்தேசித்திருக்கிறோம். இதில் திரு. முதலியாரவர்கள் நீண்டகாலமாக ஆராய்ந்து சேகரித்து வைத்திருக்கும் பல அருமையான குறிப்புகளும், நாயன்மார்களது அவதாரத் தலங்களின் குறிப்புகளும் வெளிவரும். வைகாசி 23 தேதிக்குள் முன் பணம் ரூ. 1 அனுப்பிப் பெயரைப் பதிவுசெய்வோர்க்கு சஞ்சிகை 1-க்கு ரூ. 1—4—0க்கு கொடுக்கப்படும். அதன் பிறகு வேண்டுவோருக்கு சஞ்சிகை 1-க்கு 1-8-0ம் அதற்குமேற்பட்டும் தரவேண்டிவரும். தபாற் கூலிவேறு. வேண்டுவோர் இதிற் கீழ்க்குறித்த விலாசத்திற்கு எழுதுக.

முதல் சஞ்சிகை வைகாசி-மீ சேக்கிழார் பெருமான் திருநாளன்று (5—6—35) வெளிவரும்.

S. நமசிவாயன்,

சைவப் பிரசங்கசாலை,

வைசியாள் வீதி, கோயமுத்தூர்.

Edited & Published by Rao Sahib C. M. Ramachandran Chettiar, Coimbatore & Printed by Mrs. Balasundara. Shanmughasundaram at The Royal Press, Raja Street, Coimbatore.

# செய்யுட் பகுதி.

## கடவுள் வணக்கம்.

காஞர் களிற்றுரிவை மேல்மூடி யாடரவொன் றரைமேற்சாத்தி
ஊஞர் தலையோட்டில் ஊணுகந்தான் தானுகந்த கோயிலெங்கும்
நாஞ விதத்தால் விரதிகள் நல்நாமமே யேத்திவாழ்த்தத்
தேஞர் மலர்கொண் டடியார் அடிவணங்குந் திருநணாவே.

திருநணா—திருஞான சம்பந்தர் தேவாரம்.

## பழைய பாட்டு.

**கோங்குநாட்டில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்திகள் செய்த முதல் விஜயம்.**

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம்
உரைத்துமெய் உணர்வரு ஒருமை
நிலவிய சிந்தை யுடன்திரு வருளால்
நீங்குவார் பாங்குறற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதண் பனிமலர்ப் படப்பைக்
குலவும் அக் கோங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகிஞர் முறுகும்ஆ தரவால்.

(செ. 88)

அத்திருப் பதியை அணைந்துமுன் தம்மை
ஆண்டவர் கோயிலுட் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு முன்பு
மேவுவார் தம்மெதிர் விளங்க
நித்தஞர் தில்லை மன்றுள்நின் றுடல்
நீடிய கோலம்நேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்கள்ஆ னந்தக்
கலுழிநீர் பொழிதரக் கண்டார்.

(செ. 89)

காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து
கரையில்அன் பென்பினை உருக்கப்
பூண்டஐம் புலனில் புலப்படா இன்பம்
புணர்ந்துமெய் யுணர்வினில் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா னுரைத்
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தஅந் நிலைமை
விளைவையார் அளவறிந் துரைப்பார்.

(செ. 90)

—ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்
—பெரிய புராணம்.

## புதுப் பாடல்
## நெஞ்சொடு கிளத்தல்.

---

மானிடர் ஆதல் மாநிலத் தரிதென
தேனிடு மொழியால் தெரிந்தனள் ஔவை
ஊனிடத் தேடிடும் உலக வாழ்வும்
யானினி அறிந்தபின் என்னென உரைப்பன்.

குழந்தைப் பருவமே குதுகலம் மேவுமே
பழந்தனில் இனிதே பள்ளியில் இளமையும்
கழிந்தது யவ்வனம் காட்சியின் இனிமையில்
பொழிந்தது மலர்ச்சினை புதுமனத் தியல்பினில்.

ஆனால் அத்துணை அமுதமாம் பான்மையும்
ஏனோ இந்நாள் எய்திலன் அறிகிலேன்
தேனூர் வாழ்வும் தீங்குழல் இசையும்
வானோர் மகிழ்ந்திடும் வளமையும் எங்கே?

துயரம் ஒருபுறம் துன்பம் ஒருபுறம்
உயர எழாதே உந்திடும் விசாரம்
அயர ஒருகணம் அமர விடாதே
உயிரை வாட்டிடும் உடலுக் குடனே.

ஒருநாள் மகிழ்ச்சி ஒருசிறி தடைந்திடின்
இருநாள் விசாரம் இருமருங் கெய்திடும்
பெருநாள் வந்திடின் பெரிதும் மகிழ்வேன்
தருவாய் அதுவென தனிப்பொருள் தொழுவன்.

இத்துணைத் துன்பம் இயங்கிடும் நிலையும்
எத்துணைத் தாலோ எய்தின தறியேன்
சித்தம தறிய சிறிதள வேனும்
வித்தகம் எண்ணிலேன் வினையும் செய்திலேன்.

எனினும் துயரம் எய்தியே வாட்டிட
நனியே என்மனம் நனவில் தானும்
கனியும் அழுகின கசிவை ஒக்கும்
எனிலோ கனவில் எய்திடும் நிலையென்?

பெற்றோர் எய்திடும் பீடை நோயும்
உற்றார் உறவர் ஊனின் தன்மையால்
மற்றோர் செய்திடும் மாய்கைக் குற்றமும்
உற்றதே என்னிடை உளவுதான் என்னே?

வேறுதான் உண்டோ வெறுமனே எண்ணுந்
தோறும் ஆயிரம் தோன்றும் என்பயன்?
ஆறுதல் ஒன்றிலே அமைவுறும் என்பர்
மாறும் எண்ணமும் மாயும் அதனுள்.

இதைநான் நொந்திடின் இனிபலன் என்னே
பதைத்திடும் மனதினைப் பாங்காய் நிறுத்தி
எதைநான் இயற்றினும் இறைவன் அடியில்
விதைத்திட் டமர்வன் விமலனுக் கென்றே.

—கோவைக் கிழார்.

பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
விலங்குவெள் ளருவிய வறைவாய்.

அகம் 251. 6 14.

இதில் கோசர்களுக்கு மோகூர் பணியாமையினல் மோரியர் படையெடுத்து வந்தார்கள் என்ற செய்தி கண்டிருக்கிறது. இதில் கண்ட மோகூர் தலைவர் யார் என்று தெரியவில்லை. சேரன் செங்குட்டவன் மோகூர் தலைவரின் மீது போர் புரிந்து வென்ற செய்தி பதிற்றுப்பத்து 44, 49, செய்யுள்களில் காண்கிறோம் அவையாவன.

நுண்கொடி யிழிஞை வெல்போ ரறுகை
சேண ஞயினுங் கேளென வொழிந்து
புலம்பெயர்ந் தொளித்த களையா பூசற்
கரண்கடா வுறீஇ யணங்குநிகழ்ந் தன்ன
மோகூர் மன்னன் முரசங் கொண்டு
நெடுமொழி பணித்தவன் வேம்புமுத றடிந்து
முரசுசெய முரச்சிக் களிறுபல பூட்டி
யொழுகை யுய்த்த கொழுவில் பைந்துணி
வைத்தலை மறந்த துய்த்தலைக் கூகை
கவலை கவற்றுங் குராலம் பறந்தலை
முரசுடைத் தாயத் தரசுபல வோட்டித்
துளங்குநீர் வியலக மாண்டினது கழிந்த
மன்னர் மறைந்த தாழி
வன்னி மன்றத்து விளங்கிய காடே.

பதிற் 44. 11. 10—23.

எஃகுதுரந் தெழுதருங் கைகவர் கடுந்தார்
வெல்போர் வேந்தரும் வேளிரு மொன்றுமொழிந்து
மொய்வளஞ் செருக்கி மொசிந்துவரு மோகூர்
வலம்படு குழூஉநிலை யதிர மண்டி
நெய்த்தோர் தொட்ட செங்கை மறவர்
நிறம்படு குருதி நிலம்படர்ந் தோடி.

பதிற் 49. 11. 6. 17.

பதிற்றுப்பத்தில் இச்செய்யுள்களில் கண்டிருக்கும் மோகூர் அகநானூறில் கண்ட மோகூராக இருந்தாலும் இருக்கலாம். அகநானூறில் கண்டபடி மோகூரின் மீது கோசர்கள் படையெடுத்தார்கள். அவர்கள் வெல்லமுடியாமற் போக மோரியர்கள் மோகூரின் மீது பின்னர் படையெடுத்தனர். ஆகவே கோசர்கள் மோரியர்களுடைய

நண்பர்களாக இருக்கலாம். மற்றொரு அகநானூற்றுச் செய்யுளின் படி கோசர்கள் துளுநாட்டுக்குச் சேர்ந்தவர்கள் என்பது அறியப் படும். அச்செய்யுள்

மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
கொம்மையம் பசுங்காய்க் குடுமி விளைந்த
பாக லார்கைப் பறைக்கட் பீலித்
தோகைக் காவிற் றுளுநாட் டன்ன.

அகம் 15, 11. 2—5.

என்பது. துளுநாடு கொங்காண் என்னும் பெயரோடு இப்போதும் வழங்கி வருகிறது. இதனை தமிழர்கள் கொண் காணம் என வழங்கினர். அந்நாட்டை நன்னன் என்ற அரசன் ஆண்டுவந்தான். இச் செய்தியை நற்றிணையில்

"கொண்கான நன்ன னன்னாட்
டேழிற் குன்றம் பெறினும் பொருள்வயின்
யாரே பிரிகிற் பவரே."

நற். 391, 11. 6—7.

என்று காண்கிறோம். ஆகவே நன்னன் ஆண்ட கொங்காணம் எனும் துளு நாட்டுக்குச் சேர்ந்த கோசர்கள் மோகூரின் மீது படையெடுத்தார்கள் எனத் தெரியவரும். மோகூர் எனப் பெயருடைய ஊர் கொங்கு நாட்டிற்கு வடக்கே மைசூர் பிராந்தியத்தில் தென் பாகத்தில் உள்ள ஒரு ஊர். அவ்வூரை வடமேற்கே யிருக்கும் கொங்காணத்திலிருந்து கோசர்கள் படையெடுத்தார்கள். அவர்கள் ஜெயிக்கக் கூடாமையால் அவர்களுடைய நண்பர்களும் அவர்களுக்கு வடபுறத்தில் இருந்தவருமான மோரியர்கள் கோசருக்குத் துணையாக வந்து போர் புரிந்தார்கள். இந்த மௌரியர்கள் ஒருவேளை வடநாட்டுப் பாடலீபுரத்தில் ஆண்ட மௌரியவம்சத்தினரின் சந்ததியராக இருக்கலாம். கி. பி. 567 to 597 வரையில் ஆண்ட சளுக்கிய வம்சத்து கீர்த்திவர்மன் I என்ற அரசனுக்கு மௌரியர்கள் விரோதிகளாக இருந்தார்கள் என்று பம்பாய் கெஜட்டியர் 1. வா. ப. 257-ல் கண்டிருக்கிறது.

மௌரியர்களைப்பற்றியும் கோசர்களைப்பற்றியும் இன்னும் பல செய்யுள்கள் கிடைக்கின்றன. அவையாவன

விண்பொரு நெடுவரை யியறேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதாக் குறைத்த வறை

அகம் 69. 11. 10—12.

ஓல்கியன் மடமயி லொழித்த பீலி
வான்போழ் வல்விற் சுற்றி நோன்சிலை
யவ்வார் விளிம்பிற் கமைந்த நொவ்வியர்
கணைகுல விசைக்கும் விரை செலற் கருங்கணை
முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய முறைத்த வறை.

அகம் 281. 11. 4—12.

வென்வேல்
விண்பொரு நெடுங்கொடைக் கோடித் தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
வுலக விடைகழி யறைவாய்

பதிற் 175. 11. 5—8.

மேலே கண்ட செய்யுள்களில் மோரியர்கள் யுத்தத்தில் வல்லவர்கள் என்று காண்கிறோம். இச்செய்யுள்களை ஆதாரமாகக் கொண்டு திரு. டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் சந்திரகுப்தன் அல்லது பிம்பிசாரன் காலத்தில் மௌரியர்கள் தென்னிந்தியாவின் படையெடுத்தார்கள் என்று கூறுகிறார். மேலும் அவர்கள் மதுரையை அடைந்து பொதியில் மலைமீது படையெடுத்ததாகவும் கூறுகின்றார். ஆனால் அவ்விதமான செய்திகளை திரு. P. T. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் மறுக்கிறார். பொதியில் என்பது பொதியமலையின் பேர் அல்லவென்றும் ஒரு கிராமத்தின் பொது இடமாகிய ஆலமரத்தின் கீழ் உள்ள மன்றம் என்றும் திரு. ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் மறுத்துக் கூறுகின்றார். மேலே கூறிய பாடல்களிலிருந்து மௌரியர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்தார்கள் என்பதைத் தவிர கொங்கு நாட்டிற்கு வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் மௌரியர், கோசர் என்ற இரு வகுப்பார் பெயர்களும் ஒரு செய்யுளில் இருக்கக்கண்டு அவர்களில் கோசரை கோவை நகருக்கு இணைத்துவிட்டு அது காரணத்தினால் இவ்விரு வகுப்பார்களும் கொங்கு நாட்டிற்கு வந்தார்கள் என்று இரண்டு அய்யங்கார்களும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இனி கோசர்களைப்பற்றிய பாடல்களை எழுதுவோம்.

நறுமா கொன்று நாட்டிற் போக்கிய
வொன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டும்.

குறுந்தொகை 73. 11. 2—5

பறைபடப் பணில மார்ப்ப விறை கொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நல்லூர்க் கோசர் நன்மொழி போல

குறுந்தொகை 15—11.

மழையொழுக் கருஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன.

மதுரைக் காஞ்சி 11. 507—589.

இம்மூன்று செய்யுள்களிலிருந்தும் ஒன்றுமொழிக் கோசர், பொதியில் தோன்றிய நல்லூர்க் கோசர் நன்மொழி, அவையகம் விளங்க நான்மொழிக்கோசர் என்ற அடைமொழிகள் கோசர்களைப் பற்றிக் கிடைக்கின்றன. அதாவது கிராமத்துச் சபைகளில் நன் மொழியாகவும் ஒரே மொழியாகவும் பேசக்கூடிய கோசர் என்று பொருள்படும். இவர்கள் நல்லூரிலும் மோகூரிலும் இருந்தார்கள் எனத் தெரியவரும். ஆகவே கோசர்கள் வாக்குவல்லமையும் நற்குணமும் பொருந்திய ஊர்த்தலைவர்கள் எனச் சொல்லலாம். ஆனால் திரு. ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் நான்மொழிக்கோசர் என்ற பதத்திற்கு துளு, கன்னடம், தெலுங்கு, தமிழ் என்ற நான்கு மொழிகளையும் பேசத் தெரிந்த கோசர் என்ற பொருள் படுத்துகிறார். மேலும் இந் நான்கு மொழிகளும் கோவை நகரத்தெருக்களில் இன்றும் பேசப்படுவதாகவும் கூறுகிறார். இதைத்தவிர துளுநாட்டுக் கோசர்கள் கொங்கின் மீது படையெடுத்து கோயம்புத்தூரை தங்கள் பெயரால் உண்டாக்கியதாகவும் கூறுகிறார். அதற்கு அறிகுறியாக கோசர்புத்தூர் என்பது கோயம்புத்தூர் என்று ஆனதாகவும் கூறுகிறார். இதே அபிப்பிராயத்தை திரு. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களும் முன்னொரு காலத்தில் ஒரு உபந்நியாசத்தில் கூறியிருக்கின்றார்.

இவ்வபிப்பிராயம் ஒப்பக்கூடியதாக இல்லை. மேலே காட்டிய செய்யுள்களில் கொங்குநாட்டின் பேர் எங்கும் காணவில்லை. கோயமுத்தூர் என்ற ஊர் சங்கத்தார் காலத்தில் ஏற்பட்டிருந்ததற்கு யாதொரு அத்தாக்ஷியுமில்லை. மேலே சொன்ன அபிப்பிராயம் வெறும் யூகமே தவிர சான்றுகள் கொண்டதன்று. கோயமுத்தூரில் துளு பேசியதை அய்யங்கார் அவர்கள் எப்போது கேட்டாரோ தெரியவில்லை. மேலும் கல்வெட்டுகளின்படி கோவன்புத்தூர் என்பதுதான் சரியான பெயர் என்பதை அறியலாம். சோழன் பூர்வ பட்டயம் என்ற ஒரு நூலின்படியும் இவ்வூர் ஒரு கோவன் என்ற இருளன் தலைவனால் ஏற்பட்டதென்றும் அறியவேண்டும். இவ்வூர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்திற்குப் பிந்தியே உண்டாக்கப்பட்டது என்பதும் ஆராய்ச்சியில் கண்ட ஒரு செய்தியாகும். சிலப்பதிகாரத்தில் கொங்கு மண்டலத்து இளங்கோசர் என்ற ஒரு பதப் பிரயோகத்திலிருந்து இவ்வித அபிப்பிராயத்தை அய்யங்கார்கள் கொண்டார்கள் போலும்.

—கோவைக் கிழார்.

# கவலைப் பகுதி.

## கறங்கு என்னும் காற்றூடி.

கறங்கு என்னும் பதம் பழைய தமிழ்ச் செய்யுள் நூல்களில் வழங்கப்பட்டுவந்தது. அதற்குப் பொருள் காற்றூடி, சுழற்சி, ஒலி செய்தல் என்று நிகண்டுகளிலும் அகராதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அது ஒரு விளையாட்டுக் கருவியாக தற்காலத்திலும் நமது சிறுவர்களால் எடுத்தாளப்பட்டு வருகிறதை நாம் பார்க்கலாம். ஆகவே இக்கருவி ஒரு பண்டைக்கால கருவியாக இருந்து இக்காலம் வரை வழங்கி வருகிறது என்று அறியவேண்டும்.

சிறுபிள்ளைகள் இந்த கறங்கு என்னும் காற்றூடியை வெகு சுலபமாகச் செய்வார்கள். ஒரு பனை ஓலையை 4 அல்லது 5 அங்குல அளவில் இரண்டு துண்டுகளாகக் கத்தரித்து அவைகளின் நடுவில் 1/8 அங்குல அளவிற்கு ஒரு உருண்டையான துவாரம் செய்வார்கள். பிறகு அந்த இரண்டு ஓலை நறுக்குகளையும் குறுக்களவில் வைத்து நடுத் துவாரத்தில் ஒரு குச்சியை விடுவார்கள். அந்த குச்சியை 4 அங்குல நீளமுள்ள ஒரு தட்டுக்குச்சியில் அழுத்தி விடுவார்கள். இவ்விதமாக செய்த ஒரு கருவியை காற்று வீசும்போது சிறுபிள்ளைகள் அதற்கு எதிரே வைத்துக்கொண்டு நிற்பார்கள். அப்போது காற்றின் விசையால் ஓலை நறுக்குகள் வெகு விரைவாகச் சுழலும் சிறுபிள்ளைகள் காற்றுவரும் வழியே அக்கருவியைப் பிடித்துக்கொண்டு ஓடுவார்கள். அப்போது இன்னும் விரைவாக அது சுழலும். இவ்விதமாகக் காற்றினாலே சுழலுகிறதினால்' அக்கருவிக்கு காற்றூடி என்றும், பண்டைக்காலத்தில் கறங்கு என்றும் சொல்லுவார்கள். இக்காற்றூடியை ஆகாயத்தில் பறக்கவிடும் பட்டம் என்னும் காற்றூடியோடு மயங்கக்கூடாது.

நமது பிள்ளைகள் வேறொரு விதமாகவும் கறங்கினை செய்வார்கள். நன்றாய் விரிந்த பூவரசம் பூவைக் கிள்ளி அதனுடைய காம்பை அறுத்து எறிந்து விடுவார்கள். பிறகு அதன் இதழ்களில் நேற்கோணமாக உள்ள நான்கு அகன்ற இதழ்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றவைகளைக் கிள்ளி எறிந்து விடுவார்கள். அதன் பிறகு பூவின் மத்தியிலிருக்கும் மகரந்தத்தண்டை பிடுங்கிவிடுவார்கள். அப்போது அதனில் ஒரு சிறு துவாரம் தோன்றும். அந்த துவாரத்திலே ஒரு சிறு குச்சியை விட்டு அக்குச்சியை கையில் பிடித்துக் கொள்வார்கள். காற்று வீசும்போது அதன் எதிரே பிடித்தால், காற்றடிக்க அது விரைவாகச் சுழலும். இதுவும் கறங்கில் ஒரு வகையாகும். பூ சுற்றும்போது இதழ்கள் மஞ்சளாக இருப்பதாலும் மத்தியில் இரத்தச் சிவப்பான புள்ளிகள் இருப்பதாலும், பார்வைக்கு வெகு நேர்த்தியாகத் தோன்றும். ஓலைக் கறங்கினைக்காட்டிலும் பூவரசப்பூ கறங்கு பார்வைக்கு அழகாக இருக்கிறதல்லவா? இவ்விளையாட்டினை தமிழ் நாடெங்கும் இந்தக் காலத்திலும் காணலாம்.

நாம் முன்னமே கூறியபடி கறங்கு என்பது பண்டைக்காலத்திலிருந்து வழங்கிவரும் ஒரு விளையாட்டுக் கருவியாகும். இதனைச் சூளாமணி எழுதிய தோலாமொழித்தேவர் அடியில்கண்ட செய்யுளில் எடுத்தாளுகின்றார்.

"கறங்கென காலசக் கரங்க டாமென
மறங்கிளர் மன்னர்தம் மகுட நெற்றியு
முறங்கலில் கடாக்களிற் றுச்சிமேலுவாய்த்
திறங்கினர் புரவிக டிரிதர் கின்றவே."

இச் செய்யுளில் கறங்கு எனவும் காலசக்கரம் எனவும் கூறுகின்றார். ஆகவே கறங்கு என்பது காற்றில் ஆடும் ஓலைக்கருவி எனப் பெற்றோம்.

மேலும் திருமூலதேவர் தம் அரும்பெரும் திருமந்திரத்தில் அடியில்கண்டபடி கறங்கினை எடுத்தாளுகின்றார்.

"கறங்கோலை கொள்ளி வட்டங் கடலிற்
றிரைமிறஞ் சேர்மத்தின் மலத்தினி னின்ற
திரங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்
திரங்கா வுயிரு ளாலிவை நீங்குமே."

இச்செய்யுளில் கறங்கு என்பது ஓலையால் செய்யப்பட்டது எனப் பெற்றோம். அப்பதத்திற்கு அடுத்தாற்போல கொள்ளி வட்டம் கூறப்படுவதால் கறங்கு கொள்ளி வட்டத்தைப் போல இருக்கும் எனலாம். கறங்கு சுற்றினால் தனித் தனியாக இருக்கும் ஓலை ஒரே வட்டமாக பரவினதைப்போலத் தோன்றும். அதைப் போலவே கொள்ளியை எடுத்துச் சுற்றினால் ஒரே வட்டமாக சுடர் தோன்றும், என்ற கொள்கையை திருமூலதேவர் எடுத்தாண்டிருக்கின்றார். கறங்கோலை என்ற பதப்பிரயோகத்தினால் கறங்கு என்பது ஓலையால் செய்யப்பட்டது என்றும் அது ஆகாயத்தில் பறக்க விடும் பட்டம் அல்லவென்றும் தெரிகிறது. இந்த வித்தியாசம் அறியாத சில தமிழ் உபாத்தியாயர்கள் தம் வகுப்புப் பிள்ளைகளுக்கு கறங்கு என்றால் ஆகாயத்தில் பறக்கின்ற பட்டம் என்று உரைக்கிறார்கள். இது தப்பு என்று அறியவேண்டும்.

இவ்விதம் பண்டைக்காலத்துப் புலவர்கள் கறங்கினை எடுத்தாண்டிருக்க அதே பொருளில் சமீபகாலத்து புலவர்களும் எடுத்தாண்டிருப்பதை இனி எடுத்துக்காட்டுவோம். சமீப காலத்துச் சிறந்த கவிஞரான தாயுமான சுவாமிகள் அடியில்கண்டபடி இரண்டு செய்யுட்களில் கறங்கினை உவமைத்திருக்கின்றார்.

> ஆடுங்கறங்கு திரிகையும்போல வலைந்தலைந்து
> காடுங் கரையுந் திரிவதல்லானின் கருணைவந்து
> கூடும்படிக்குத் தவமுயலாத கொடிய ரெமன்
> தேடும் பொழுதென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே."
> "ஆடுறெங்காகி யலமந்து முன்றமனம்
> வாடுமெனை யையா நீவாவெனவுங் காண்பேனோ."

மேலே எடுத்துக்காட்டிய மேற்கோள்களினால் கறங்கு என்னும் ஒரு சிறு விளையாட்டுக்கருவி திருமூலதேவர், தோலாமொழித் தேவர் முதலான பண்டைக்காலத்துப் பெரும் நூலாசிரியர்களால் எடுத்தாளப்படுவதன்றி தற்காலம் வரைக்கும் புலவர்களால் உவமைக்கு உகந்த பொருளாக மதிக்கப்பட்டு வருவதைக் காண்கிறோம். தவிர பண்டைக்காலம் முதல் அக்கருவி நம் நாட்டுச்சிறுவர்களால் பாராட்டப் பெற்று வந்ததெனவும் அறிகிறோம்.

நம் நாட்டு அரும் பெரும் புலவர்கள் மிகத்தாழ்ந்த பொருள் களிலும் உயர்ந்த எண்ணங்களை காண்பதுண்டு. அதற்கு மேலே காட்டிய மேற்கோள்களே தகுந்த உதாரணங்களாகும். திருமூல தேவர் கறங்கோலையையும் கொள்ளி வட்டத்தையும் பிறவாழியில் சுழலும் ஆன்மாவிற்கு ஒப்பிடுவதைக் காணலாம். மேயும் தாயுமான வர் ஆடுகிற கறங்கு போலவும், சுழலுகிற திரிகை போலவும் ஒரு வன் அலைந்தலைந்து திரிவதாகக் கூறுகிறார். மற்றும் ஆடுகிற கறங்கு போல மனம் சுழலுகிறதெனவும் இரண்டாவது செய்யுளில் கூறு கிறார். ஆகவே தாழ்ந்த அறிவுடையவர்களும் பெரும் விஷயங்களை அறியவேண்டும் என்ற பேரெண்ணத்தினால் தினந்தோறும் நேரில் காண்கிற விளையாட்டுக் கருவியாகிய கறங்கினை உதாரணமாகக் கொண்டது எத்தனை மேன்மையது பாருங்கள்.

இவ்விதம் பண்டைத் தமிழர்கள் விளையாட்டுக் கருவிகளை தத் துவ விசாரணைக்குக் காரண கருவிகளாக கொண்டிருக்க, தற்காலத் துக் கலா வல்லபர்கள் இக்கருவிகளை வேறு என்ன வகைக்கு பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதை இனி ஆராய்வோம்.

இரண்டு ஓலை நறுக்குகள் காற்று அடிப்பதனால் வெகு விரை வாக சுழல்கின்றன. அதனுடைய வேகம் ஒரே வட்ட ஓலையைப் போல அதனைக் காண்பிக்கும். அது சுற்றுகிற வேகத்தைக் கண் டால் அவ்வோலைகளுக்கு எத்தனை விசை அல்லது சக்தி வந்திருக் கிறது பாருங்கள். இவ்வித சக்தியினால் பல பயன் கொடுக்கத்தக்க கருவிகளையும் செய்யலாம் அல்லவா? கறங்கோலையைப்போலவே பெரிதாகவும் பலமாகவும் தகடுகளைக்கொண்டு ஒரு கறங்கினைச் செய்தால், அதின்மேல் வீசும் காற்றினால் அது விரைவாகச் சுற் றும் அதன் இருசுக்கு கயிற்றையோ அல்லது சங்கிலியை இணைத்து மறுபக்கத்தில் ஒரு சக்கரத்திற்கு கோர்த்து அதன் மூலமாக பல காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். இவ்விதமாகச் செய்யப் படும் ஒரு யந்திரம் தான் காற்று யந்திரம் (Wind Mill) என்பது. காற்று அதிகமாக வீசும்படியான இடமாகிய சுமார் 100 அடிக்கு மேலாக சக்கரம் போன்ற விசிறியை வைத்துவிட்டால் அது சுழலு வதினால் ஆழத்திலிருக்கும் தண்ணீரை மேலே இறைக்கமுடியும்.

ஆலையில் இருக்கும் தானியங்களை அறைக்கமுடியும். இவ்விதம் நீர் எடுக்கும் காற்று யந்திரங்களை நமது நாட்டிலும் கடற்கரை யோரங்களில் பார்க்கலாம். உதாரணமாகக் கன்னியாகுமரிக்குச் சென்றவர்கள் இதனைப் பார்த்திருப்பார்கள். தானியம் அறைக்கும் காற்று யந்திரங்கள் ஹாலண்டு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய நாடுகளில் இருப்பதாக நாம் நூல்களில் வாசித்திருக்கின்றோம்.

இவ்விதக் கருவிகளைக்கொண்டு விசிறிகளையும் செய்வதுண்டு. உதாரணமாக ,மின்சார விசிறிகள் காற்றினால் சுழல்வதினால் காற்று அடிக்கும். ஆகவே இதனுடைய தத்துவம் எதிர் முறையான தத்துவமாகும். இவ்வித விசிறிகளினுடைய தத்துவத்தைக் கொண்டு வேறுவித யந்திரங்களையும் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவைகளை மோட்டார் ரதங்களிலும், ஆகாய விமானங்களிலும் காணலாம். அவைகளுக்கு முன்னால் பலமான விசிறிகள் வைத்திருப்பார்கள். அவை சுழல்வதினால் காற்றினை இழுத்துவிடுகின்றன. அதனாலே முன்னால் இருக்கும் காற்றானது குறையவே வாகனத்தை முன் செலுத்துகிறது. இவ்விதத் தத்துவத்தினால் தான் மோட்டாரும் ஆகாய விமானமும் அதிவேகமாக செல்கின்றன. ஆகவே ஒரு தாழ்ந்த விளையாட்டுக்கருவியினால் எத்துணைச் சிறந்த தத்துவங்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள் பாருங்கள்.

—கோவைக் கிழார்.

---

## பத்துப் பாட்டும்—ஆசிரியர் பெயரும்.

முருகுநெடு நல்வாடை நக்கீரன்; பாண்தத்தன்; முல்லை பூதன்;
பொருநாறு முடத்தாமன் குறிஞ்சிப்பாட் டேகபிலன் பூணும் இன்பப்
பெரும் பாண்பட் டினப்பாலை உருத்திரனூர்; மலைகடாம் பேருங்
கௌசிகன்
மருதன்மாங் குடிமதுரைக் காஞ்சியெனும் பத்தியலும் வழங்கினரே.

[தத்தன்—நத்தத்தனார்; பூதன்—நப்பூதனார்; உருத்திரனார்—உருத்திரங்கண்ணனார்; மருதன் மாங்குடி—மாங்குடி மருதனார்.]

## சமயப் பகுதி.

### இந்தியாவின் பழய சமயம்.

---

சரித்திர ஆசிரியர்கள் இந்தியா என்னும் நமது நாட்டின் சமய நிலையைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்து பல முடிபுகளைக் கண்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 4000 ஆண்டுகளின் முன்னிட்டு உள்ளது வேதகாலம் என்றும், அப்போது ஆரியர்கள் வடக்கி லிருந்து இந்நாட்டிற் புகுந்து குடியேறினர் என்றும் ஒரு சரித்திர முடிபு இப்போது ஒப்புக்கொள்ளப்பெற்றிருக்கிறது. ஆரியர்கள் இமாலயத்துக்கு வடக்கே நின்ற ஒரு நாட்டிலிருந்து இந்தியா வினுள்ளே வந்து பரவித் தெற்குவரை சென்று குடியேறினர் என் பது அந்தக்கொள்கை. இவர்கள் ஸ்திர வாசம் பெறுதவர்களாய்ப் பசுக்களையே பெரிதும் தங்கள் உடமையாகக்கொண்டு பல இடத் தும் தங்கி வந்தார்கள் என்றும் பல சரித ஆசிரியர்கள் பழய நூல் களிலிருந்து ஊகிக்கின்றார்கள்.

"நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க் குரிய"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதிய ஆசிரியர் நச்சினார்க்கினியர்,......முக்கோலுடையார் இருவருட்பிச்சை கொள் வானும் பிறுண்டிருந்து தனதுண்பானும் உலகியலின் நீங்காமை யின் அவரையே வரைந்தோதினான் என்பது" எனக்கூறியுள்ளார். கரகமும், முக்கோலும், மணையும் முதலியவைகளும் உரையிற்கண்ட பிச்சைகொள்ளுதல் முதலியவையும் ஓரிடத்தும் தங்காது செல்வோ ரிலக்கணத்தைக் குறிப்பன போலத்தோன்றுகின்றன். தொல் மாப்பியம் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கணம் என்பர்.

இனி இவ்வாறு ஆரியர்கள் இந்தியாவில் வந்து உட்புகு வதற்கு முன்னர் இந்தியாவிலே மக்களிருந்தார்கள். அவர்கள் நாக

ரீகம் பெற்ற சமூக வாழ்க்கை வாழ்ந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையிலே சமய நிலேயும் இருந்தது என்பதும் பல சரித்திர ஆசிரியர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மையாம். அந்தச்சமய நிலேயாது? என்பது இன்னும் விளக்கமாக முடிவுபெற்றதாகக் காணப்படவில்லே. அதுபற்றிச் சில வார்த்தைகள் இங்குப் பேசுவோம்.

வடக்குப் பார்த்துக் கும்பிடும் வழக்கம் ஒன்று நம்மிடத்திலே உண்டு. ஏன்! வடக்கே இமயமலேயும் அதிலே கைலாயமும் இருக்கிறதென்ற ஒரு கொள்கையினுலேதான் அந்தத்திசை நோக்கிக் கும்பிடும் வழக்கம் நிலேபெற்றது என்பர். கிழக்குப்பார்த்துக் கும்பிடுவோர் சூரியன் எழுகின்ற திசை என்று கருதி விதித்தார்கள் என்றும் கூறுவர்.

வடக்கிலே உள்ள இமயமலேச் சாரலிலே இந்து நதிச்சார்பிலே ஒரு பெரிய மண்மேடு இருந்தது. அது சுமார் 250 ஏகர் பரப்பு இருக்கும். இதனேச் சென்ற 1925-ல் தோண்டிப்பார்க்க ஆரம்பித்தார்கள். அங்கு உள்ளே ஒரு பெரிய பட்டினம் புதைபட்டிருப்பதாகத் தோன்றிற்று. மண்மேடு முழுதும் தோண்டி எடுத்தார்கள். இந்தவேலே நமது அரசாங்கத்தார்களே தங்கள் பழைய ஆராய்ச்சி (archeological) இலாகா உத்தியோகஸ்தர்கள் மூலம் நடத்தினர்கள். இது முழுதும் தோண்டி எடுக்க 5 வருஷங்கள் ஆயின. லட்சக்கணக்கான ரூபாய் செலவாயிற்று. உள்ளே ஒரு பெரிய பட்டினமும் பெரிய பெரிய தெருக்களும் அவற்றின் இருபுறம் ஒழுங்காய்க்கட்டின பெருவீடுகள் மாளிகைகளும் இருந்தன. பொதுமக்கள் குளிக்கும் வசதி, தண்ணீர் வசதி, தண்ணீர் வடியும் வசதி முதலிய நவீன நாகரீகச் சமூக வாழ்க்கை அடையாளங்கள் பலவும் காணப்பட்டன. வீடுகளுக்குள் பற்பல பாத்திரங்கள் பண்டங்கள் மிகுவேலேப்பாடுள்ள வெள்ளி தங்க நகைகள் முதலியவைகளும் இருந்தன. அங்கு காணப்பட்ட பொருள்கள் அநேகம். அவற்றிலிருந்து அந்தப்பட்டினத்தில் வாழ்ந்த மனிதர் தற்காலம் நாம் கண்டு பொருமைப்படத்தக்கபடி உணவு, உடை, அணி முதலிய எல்லாவற்றிலும் உயர்ந்த நாகரீக வாழ்க்கையே வாழ்ந்தார்கள் என்று கூறலாம். இலாகாத்தலேவர் Sir John Marshall சர்

ஜான் மார்ஷல் என்பவர் ஒரு பெரிய புத்தகம் எழுதி 1931 ஆண்டில் Indus Valley Cirilisation இந்து நதிச்சாரல் நாகரீகம் என்று பெயரிட்டு வெளியிட்டிருக்கிறார். அதிலே அங்குக்கண்ட பல பொருள்களையும் படம் எடுத்துப்போட்டு அந்தப்பட்டினத்தின் சரித்திரம் எழுதியுள்ளார். அந்தப் புத்தகம் 200 ரூபாய் விலையுள்ளது. சர்க்காரிடமும் பெரிய புத்தகசாலைகளிலும் பார்க்கலாம். இந்தப்பட்டின வாழ்க்கையின் காலம் 6000 ஆண்டுகளுக்கும் முற்பட்டதென்று பல காரணங்கள் காட்டி அவர் முடிவு கட்டியிருக்கிறார். இன்னும் சில ஆசிரியர்கள் அது 6000 ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலமாகவே இருக்கவேண்டுமென்று முடிக்கிறார்கள்.

இந்தப்பட்டினத்தின் சமய வாழ்க்கை யாது? என்றால் அங்கே உயர்ந்த வேலைப்பாடமைந்த ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கங்கள் இருந்தன. அம்பிகை உருவமும் நந்தி உருவமும் இன்னும் சில தெய்வங்களின் உருவமும் இருந்தன. ஆணாக பெண்ணாக சிவமும் சத்தியுமாகக் கடவுளை வழிபடும் சமயமே அந்நாளில் அவ்விடத்தில் கையாளப்பட்டிருந்தது என்றும் அது சைவ சமயமே என்றும் அந்த ஆசிரியர் தலைக்கட்டி முடித்துக் கூறுகிறார். இன்னும் அந்தச் சமய வாழ்க்கைக்கு அறிகுறியாகக் கிடைத்த பொருள்கள் மிகப்பெரும் பழங் கொள்கைகளை நாட்டக் கூடிய னவாயிருக்கின்றன. இவற்றிற் சில படங்களை எடுத்து Illustrated weekly of India 26—2—1933 வெளியிட்டிருக்கிறார்கள் அங்கே கிடைத்த உருவங்களில் ஒன்று மூன்று சிரங்களுடன் தலையிலே திரிசூலம் போல உயர்ந்த ஒரு முடி தரித்து நான்கு கைகளுடையதாய் உபதேச மூர்த்தியாய் மரத்தினடியிலே உயர்ந்த பீடத்திலே யோகாசனத்திலே அமர்ந்து இருப்பது ஒரு கையிலே சின் முத்திரையும் ஒரு கையிற் புத்தகமும் கொண்டது. சுற்றிலும் முனிவர்களும் இருடிகளும் உண்டு. யானை, பாம்பு, புலி, சிங்கம் முதலியவைகளின் உருவங்களும், சுற்றிலும் உண்டு. காதுகளைப் பொத்திக்கொண்டு வெகுசவனமாய்க் கேட்பதுபோன்ற சில உருவங்களும் உண்டு. கயிலாயத்திலே கடவுள் திரிமூர்த்தி

களுக்கும் முனிவர்களுக்கும் ஞான உபதேசம் செய்தார் என்று நம்முடைய பழம் புராணங்கள் கூறுகின்றன. அதுதான் இந்தக் கோலமோ என்று தோன்றுகின்றது.

"காதுபொத்தரைக்கின்னரர் உழுவைக்கடிக்கு பன்னனரம்
பிடிப்பரும் சீயம்
கோதிமாதவர் குழுவுடன் கேட்பக்கோல ஆல் நிழற்
கீழறம்பகர"

என்ற சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்திற்கு இவர்தான் பொருளாவாரோ என்றும் தோன்றுகிறது. இவ்வாறெல்லாம் கிடைத்த ஆதாரவுகளைக்கொண்டு சைவ சமயமே உலகத்தில் மக்கள் கையாண்ட மிகப்பழமையான சமயம் என்று அந்த ஆசிரியர் முடிவு கட்டி எழுதியுள்ளார். பழம் புதையலைத்தேடி எடுத்துக் காட்டியுள்ள இந்தப் புத்தகத்திலே உள்ள பழம் புதையல்களை இன்னும் நண்பர்கள் ஆராய்ந்து சுருக்கி வெளியிட்டுப் பலர்க்கும் பலனபடுத்துவார்களானால் நம் நாட்டிலே அறிவு வளரும். நன்மை பெருகும்.

C. K. சுப்பிரமணிய முதலியார்.

## திருக்குறளும் சமரசமும்.

(374-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

**பொறையுடைமையும், அழுக்காறு அகற்றலும்.**

இனி இல்வாழ்வோர் சமுதாயத்திற் பலதிறப்பட்டவரோடுங் கலந்துகொள்ளவேண்டியவராதலானும், அனைவரையும் சமரசக்கண் கொண்டு பார்த்தற்குரியராயுலானும், பிறர் மாட்டுப் பொறையுடையோராயும். அதன் எதிரிடையாகிய அழுக்காறைக் களைந்தவராயும் இருத்தல் வேண்டும். இதனை ஆசிரியர் பொறையுடைமை அழுக்காருமை என்னுமதிகாரங்களில் விளங்கக் கூறுகின்றார். காரணம் பற்றியாவது, அறியாமையாலாவது ஒருவன் தம்மிடத்துத் தீங்கு செய்தவிடத்துத் தாமும், அதனை அவனிடத்துச் செய்யாது பொறுத்துக் கொள்ளுதலே பொறையுடைமையாம். பிறர் கூறிய குற்றங்களைப் பொறுத்தலும், பிறர் செய்த குற்றங்

களைப் பொறுத்தலும் என. பொறுமை இருவகைப்படும் பிறர்கூறிய குற்றங்களைப் பொறுக்கும் இல்வாழ்வோர், துறவிகளை ஒத்த பெருமையுடையராவர் என்று திருக்குறள் கூறும், நெறியினீங்கியோர் கூறும் இன்னுச் சொற்களைப் பொறுக்கும் இல்வாழ்வோர் துறந்தோர்போன்ற தூய்மையுடையோர் என்று கருதப்படுவதோடு அதற்கு மேலும் ஒருபடி உயர்வுடையோராயும் ஆசிரியரால் கொள்ளப்படுகின்றனர். அறிவில்லாதவர் பொறுக்கக்கூடாமைக்கு ஏதுவாகிய இருவகைப் பற்றுக்களுடனிருந்தே இல்வாழ்வோர் இக்குற்றங்களைப் பொறுத்தலால் தவஞ்செய்வாரினும் பெரியராயினர்.

பிறர், காரணம்பற்றியாவது, அன்றிக் காரணமின்றியே அறியாமையினுலாவது செய்யும் குற்றங்களையும் இவர்கள் தம் தகுதியினுலேயே வென்றுவிடல் சிறப்புடைமையாகும். அவர் செய்த தீமைகளுக்கு எதிராகத் தாமும் அத்தீமைகளையே அவர்களுக்கு மீட்டுஞ் செய்துவிடாது, பொறுத்துக்கொண்டு, அன்னுரை நல்வழிப்படுத்த முயலலே பொதுநோக்காளிக் கழகாகும். அக்குற்றங்களைப் பொறுத்தலோடு, அறவே மறந்துவிடல் மிகவும் சிறப்புடையதாகும். "நன்றல்லதன்றே மறப்பது நன்று" என்று முன்னரே ஆசிரியர் கூறினுர். பின்னும் "இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ்செய்து விடல்' என்று வேறு ஒரு விதமாகக் கூறுகின்ருர். இவ்வாறு பொறுத்தலினுல் ஒருவர்க்கு உலகமழியுந் துணையும் புகழ் நிலைத்து நிற்கும். ஆனுல் தமக்கு தீங்கு செய்தவரை தாமும் அஃதே செய்யக் கருதி ஒறுத்தவருக்கோ ஒரு நாளையின்பமே உண்டு என்னலாம். அவ்வின்பமும், இன்பம் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிருர்களே ஒழிய உண்மை இன்பமாகாது. இவ்வாறு பிறர் செய்யுந்தீமைகளைப் பொறுப்போர் தங்கள் பொறுமையினுல் "அகழ்வாரைத்தாங்கும் நிலத்தை" ஒக்கின்றனர் என்று ஆசிரியர் அவர்கள் பெருமையை உவமை மூலம் விளக்கிப்போந்தனர்.

இல்வாழ்வார் பொறுமையைக் கையாளுவதைப் போன்றே, பொருமையைத் தன்னகத்தினின்று ஓட்டி, அழுக்காருமையிற் பழகவேண்டும். பிறர் ஆக்கங்கண்ட வழி பொருமையே அழுக்

காறு எனப்படும். அழுக்காறை ஒழித்த இயல்பினையே இல்லறத்தோரும், சமரச நோக்காளிகளும் ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும். பிறராக்கம்பேணாது அழுக்கறுப்பான் தனக்கும் ஆக்கத்தை வேண்டாதவனாகின்றான். தன்கட் பிறக்கும் அழுக்காறே ஒருவர்க்குத் தீராப்பகையாயிருந்து அவரை அழிக்கும் அவர் சுற்றமும் உடுப்பதும் உண்பதுமின்றிக் கெடுமாம். திருமகளும் அவரைத் துறந்து தனது தவ்வைக்கு அடைக்கலப் பொருளாக விட்டுச்செல்வள். "அழுக்காறெனப்படும் ஒரு பாவி" தற்சேர்ந்தாரின் திருவை அழித்தலோடின்று, தீயுழியும் உய்த்துவிடும். ஆதலின், அழுக்காறினாற் பெரியாராயினாருமிலர்; அஃதிலார் பெருக்கத்தினீங்கினாருமிலர்.

இனி இல்வாழ்க்கையில், மன,மொழி, மெய்க்குற்றங்களை நீக்கி, கொள்ளத்தக்கனவற்றைக் கொண்டு, தள்ளத்தக்கனவற்றைத் தள்ளிப் பலருக்கும் பயன்பட்டு ஒழுகுவோர், இம்மைப் பயனாகிய

**இல்வாழ்வோரும் புகழும்.**

புகழை எய்துவது திண்ணம் என்பதைக் காட்டவே ஆசிரியர் "புகழை" இல்லறவியலின் ஈற்றின் கண்வைத்தார் என்க. மேலும் அது எல்லோராலும் அடைதற்குரியது என்பார், இசையொழிய வாழ்வார் வாழாதவர் என்றும், வசையொழிய வாழ்வாரே வாழ்பவர் என்றும் தோன்றிற் புகழொடுதோன்றுக, அஃதிலார் தோன்றலிற்றோன்றாமை நன்று என்றும் கூறுகின்றார். பூதவுடம்பு நீங்கினும் புகழுடம்பு எஞ்ஞான்றும் அழிதலில்லை. "மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர், தம்புகழ் நிறீஇ இத்தாமாய்ந்தனரே" என்றார் பிறரும். ஆசிரியரும் "ஒன்றாவுலகத்து உயர்ந்த புகழல்லாற் பொன்றாது நிற்பதொன்றில்" என்றார். இசையென்னும் எச்சம் பெறாவிடின் வையத்தார்க்கெல்லாம் அது வசையாகுமென்றலின் அனைவரும் இசையோடு வாழ்ந்து பேறுபெற வேண்டுமென்பதே திருக்குறளின் சமரச போதனையாகும்.

எனவே இதுகாறும் திருக்குறள் கூறிவந்த இல்வாழ்க்கை முறையைப் படிப்போர் அதன் பொது நோக்கத்தைக்காணாது போகார். இல்வாழ்வார் அனைவரும் எக்குலத்தாராயினும், எக்காலத்தாராயினும், எம்மொழியினராயினும், இம்முறையை ஏற்றுக்கொள்

வதற்குரிய தடைகள் உள்ளன என்று இதுகாறும் ஒதுக்கியுள்ளதாக யாமறியவில்லை. இந்நூல் கூறவந்த இல்வாழ்க்கை முறை தவறு என்று கூற முன்வந்தவர் இல்லையென்றே கூறலாம்.

நம் தமிழ்நாட்டில், சிறப்பாக இம்முறை கையாளப்பட்டு வருவதைக் கிராமப்பக்கங்களிற் செல்வோர் இன்றும் சில பலஇடங்களிற் காணலாம். தாளாற்றித் தந்த பொருளையெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்வதிலேயே செலவழிக்கும் சிறப்பு வாய்ந்த வேளாளரும், பிறதமிழ் மக்களும் வதியும் தமிழ் நாட்டினுள்ளே நாம் சென்று அன்னார் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால், திருவள்ளுவர் கூறும் இல்வாழ்க்கையின் இலக்கணத்துக்கு இலக்கியங்களைக் காணலாம். சிறப்பாய், விருந்தோம்பலுக்கும் பிறநற்குணங்களுக்கும் இருப்பிடமாய் அவர்கள் குடிவாழ்க்கை மிளிர்கின்றது. குடியைக்கெடுக்கும் பல கெட்டபழக்க வழக்கங்களும், அமிதமான செயல்களும் ஆண்டு காணக்கிடையா. மக்கள் ஒற்றுமை யுடையோராய், பிறர்க்கென வாழும் பெற்றியுடையோராய், கடவுள் பக்திமிக்கோராய் மிக அனுமதியான குடிவாழ்க்கையை நடத்திவருகின்றனர். "யாண்டு பலவாக நரையிலவாகுதல், யாங்காகியரென வினவுதிராயின், மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர், யான் கண்டனைய ரென்றினையரும் வேந்தனும், அல்லவை செய்யான் காக்குமதன்றலை, யான்றவிந் தடங்கிய கொள்கைச், சான்றோர் பலர் யான் வாழுமூரே" என்று இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்னர் பிசிராந்தையார் கூறிய அமைதியான மேன்மை பொருந்திய குடிவாழ்க்கை முறையை இன்றும் சில இடங்களில் காண்கின்றோம். "ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலு மிரண்டும் சொல்லுக்குறுதி" என்பது அன்னார் கொண்டுள்ள முதுமொழி.

நாகரிகம் என்ற பேய் பிடித்து, முன்னேற்றம், சீர்திருத்தம் என்ற பெயர்களால் மக்களை அவர்கள் இன்பம் என்று கருதித்திளைக்கும் பல போலி இன்பங்களிலும், துன்பங்களிலும் செலுத்தி ஆட்டுகின்ற நகரங்களிலும், இக்காலத்தில் பணக்காரர்கள் வீட்டிலும், பிற இடங்களிலும், முதலாளிகளிடத்திலும், தொழிலாளிகளின் எளிய குடிசைகளிலும், குலத்தால் மிக்கோம் என்று இறுமாந்திருப்

போரிடையிலும், தாழ்த்தப்பட்டோர், தீண்டாதோரின் போரிடையிலும் அவர்கள் அறிந்தோ, அன்றி அறியாமலோ திருக்குறள் வகுத்த பொது நோக்கமுறை ஒரு சிறிதாயினும் பயனைச் செய்யாமற் போகவில்லை. மேலும் பல மதத்தவரும் இம்முறையை மேற்கொள்வதாற்படும் இழுக்கொன்றுமில்லை. எங்கெங்கு நன்மையும் உண்மையுங் காணப்படுகின்றதோ அதையெல்லாம் மேற்கொள்ளல் அறிவார் தொழிலன்றோ? எனவே திருவள்ளுவர் முறையையுமவர் மேற்கொள்ளலாம். பிராமணனுயினென் தமிழனுயினென்? கிறிஸ்துவ மகமதியனுயினென்? சைவனுயினென்? வைணவனுயினென்? அன்றிச் சமண பௌத்தனுயினுற்ருனென்? மனமொழி மெய்களினடக்கமும், அவற்றினல் நிகழும் பாவங்களை ஒழித்தலும் அனைவரும் வேண்டுவதொன்றன்றோ? ஈகை தீது என்றும், இனியது கூறல் முனியத்தக்கதென்றும், அடக்கமுடைமை விடத்தக்கதென்றும், செய்ந்நன்றியறிதல் பொய்மையுடைத்தென்றும், பிறவற்றையும் மறுத்துக்கூறும் மக்கள் எந்நாட்டிலுள்ளார், எச்சமயத்துள்ளார், அன்றி நாகரீகமுதிர்ந்த எக்காலத்துத் தானுள்ளார்? இனிப் புகழைவிரும்பா மக்கட் பிறவியுமுண்டோ? இவ்வுலகில் புகழன்றிப் பொன்றுது நிற்பது வேறு என்ன இருக்கின்றது?

ஆதலால் மக்களாய்த்தோன்றியோரனைவரும் புகழெய்த விரும்பியும், அதற்காவன செய்யாது வாளாகாலத்தைக் கழிப்பின், அதுதானே வந்தெய்துமோ? அதற்கேற்ற நற்செயல்களையும், பரோபகாரத்தையுஞ் செய்து திருக்குறள் கூறும் பொது நோக்கமமைந்த ஒழுக்கமுறையாகிய இல்வாழ்க்கையை ஒவ்வொருவரும் தத்தம் கால, தேச இயல்புகளுக்கு ஏற்றவாறு மேற்கொண்டு ஒழுக்க கடவர். அதுவே "கைம்மாறு வேண்டா கடப்பாடு, மாரிமாட்டு என்னுற்றுங் கொல்லோ வுலகு" என்று தாம் கூறியவாறு பிறருக்குழைத்த தெய்வப் புலவர்க்கு நாம் செய்த கைம்மாறு என்று நாம் கருதிக்கொள்ளலாம்.

(தொடரும்)

வித்வான். S. ஆறுமுக முதலியார், B. A., (Hons) L. T.,

# ஆராய்ச்சிப் பகுதி.

## புதுவை ஆனந்தரங்கப் பிள்ளை.

(22-பக்கத் தொடர்ச்சி.)

இந்நமச்சிவாயப் புலவரே ஆநந்தரங்கப் பிள்ளையினைப் பாடியது:—

"பாரார்ஆர் சொல்லார் பறவைக் குலங்கடம்மிற்
சீராருங் கிள்ளைமுதற் செப்பலான்—ஓரா
யிரம்பையா னந்தரங்க னின்பரங்க னன்பன்
பிரம்பையா னந்தரங்கன் பேர்."

[பாரார்—உலகத்தார். கிள்ளை—கிளி. கிள்ளை செப்புதல்: கிளிகள் "ரங்க, ரங்க" என்று சொல்லுதலை யீண்டுக் குறித்தது. ஓராயிரம் பையான்: ஆயிரம் படங்களையுடைய ஆதிசேடனைப் படுக்கையாக வுடையான்; பை—படம். அந்தரங்கன் அழகிய அலைகளையுடைய திருப்பாற்கடலை யிடமாகவுடையவன்; இனிச் சருவாந்தரியாமியா யிருப்பவன் எனினுமாம். இன்ப ரங்கன் இவ்வுலக வீட்டுலகவின் பங்களையளிக்கும் அரங்கநாதமூர்த்தி; இன்பமேயுருவாக்கொண்ட அரங்கனெனினுமாம். அரங்கனுக்கு அன்பனாகிய பிரம்பை ஆநந்த ரங்கன் பேர் கிள்ளை முதற் செப்பலான், பாரார் ஆர் சொல்லார் என வினைமுடிவு செய்க.]

படிக்காசுப்புலவர் ஆநந்தரங்கப்பிள்ளையைப் பார்க்க வந்தபொழுது அங்கிருந்த நமச்சிவாயப் புலவர் பிள்ளையிடம் இன்னாரென்று கூறு முறையில், 'இவர் தொண்டை மண்டல சதகம் பாடிய படிக்காசுப்புலவர்' என்று கூற அப்பொழுது ரங்கப்பிள்ளை அவரை நோக்கி 'ஐயா, தாங்கள் என் மீதா தொண்டைமண்டல சதகம் பாடியுள்ளீர்? அதில் ஒரு கவி சொல்லுங்கள்' என்று கேட்டனன். படிக்காசுப் புலவர் சிறிதும் யோசியாமல் உடனே பாடிய செய்யுள்:

“மந்திரி யூகி யறிவினிற் சேடன் வடிவின்மதன்
இந்திர போகன் நிதியிற் குபேரன் இரவலர்க்கோர்
ஐந்தரு வாகுஞ்சொல் வாக்கி லரிச்சந்த்ர னாகுமென
வந்தரு ளாநந்த ரங்கனும் வாழ்தொண்டை மண்டலமே”.

[மந்திரி யூகி: மந்திரித்தொழிலில் யூகிக்குச் சமானமானவன். யூகி: உதயணன் மந்திரி; இவனது நிகரற்ற திறமையைப் பெருங் கதையானுணர்க. இனி, ‘மந்திரி யூகி’ என்பதற்கு யூகித்தறிதலில் வியாழனை நிகர்த்தவன் எனப்பொருள்கோடலுமாம். சேடன்— ஆதிசேடன். மதன்—மன்மதன். இரவலர்க்கு—யாசகர்க்கு. ஐந்தரு— கேட்டார்க்கு வேண்டியவற்றை யளிக்கும் கற்பகம் முதலிய தெய்வ விருக்ஷங்கள். சொல்வாக்கில் அரிச்சந்தரன்: ஸத்தியஸந்தன் என் றபடி] இச்செய்யுள் தொண்டை மண்டல சதகத்தில் இல்லாதது.

இராயவேலூர் இராமசந்திர கவிராயர் திருவேங்கடம் பிள்ளை மீது பாடிய வினவுத்தரச் செய்யுள்:

“இரவல னேயுனக் கில்லாத தென்ன இதயமென்ன
பரவுண வென்ன சுவையற்ற தென்னசொற் பான்மையென்ன
தரவுரை செய்திடென் றானதற் கொன்றையுஞ் சாற்றிலன்யான்
வரதிரு வேங்கட னாதாவென் றேன்பொன் வழங்கினனே”.

[இல்லாதது—திரு (செல்வம்); இதயம்—வேம்; உணவு—கடன்; சுவையற்றது—நா; சொற்பான்மை—தா; என நிரலே கூட்டுக.]

ரங்கப்பிள்ளை மீது ஜவ்வாதுப்புலவர் பாடியது:

“பானுகிர ணம்பார்க்கும் பங்கேருகம் நிலவு
தானும்வரப் பார்க்குஞ் சகோதரங்கள்—வானமரும்
மையைப்பார்க் கும்மயில்கள் மாவிஜயா நந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவோர் கண்.”

[பானு—சூரியன்; பங்கேருகம்—தாமரை; சகோரம்—நிலாவை யுண்ணும் பறவை; மை—மேகம்; புலவோர்கண்—ஆநந்தரங்கன் கையைப் பார்ப்பது அவன் கொடைச்சிறப்பு நோக்கி.]

மேற்படி புலவர் செவிலியிரங்கற்றுறையாக அவனைப்பாடியது:

"பாலையிலாள் பின்னங்கால் பஞ்சுளியென் றேசுளிப்பாள்
பாலையிலாள் பின்னென் படுவாளோ—சோலையிலே
யாடு மயிற்பிரம்பூ ராநந்த ரங்கதுரை
நாடுதனி லென்னிளமின் னாள்."

[பால் அயிலாள்—பாலுணவும் உட்கொள்ளாள்; பஞ்சு உளி என்றே பின்னங்கால் சுளிப்பாள்; செம்பஞ்சுபடினும் உளிபடுவதுபோலப் பின்னங்கால் (குதிகால்) வருந்துவாள்; மின்னாள்—மின்னற்கொடி போன்ற தலைவி.]

இவரே பாங்கியிரங்கற்றுறையிற் பாடியது:

"இழைக்கின்ற கூடல் கிணறு யிருகை வளையுறையா
மழைக்கண்க ணீர்நிறை வாகத் தவளையின் வாய்க்கிங்கிணி
தழைக்குஞ் சரணமின் வாடுவ ளோதமி ழோர்க்குப்பொன்கொண்
டழைக்குங் கையா னெங்க ளாநந்த ரங்கன் அணிவெற்பிலே."

[கூடல்—கூடற்சுழி; உறை—கிணற்றிற்கு உட்புறமாக மண்சரி யாமலிருக்கும்படி ஒன்றன்மீதொன்றாக அடுக்கப்படும் மண்வளையம். தவளையின் வாய்க் கிங்கிணி—தவளையின் ஒலிபோலும் ஒலியினையுடைய சிறு சதங்கைகள். சரணம்—கால். மின்—தலைவி].

மதுர கவிராயர் ரங்கப் பிள்ளையைப்பாடியது:—

"உலங்கொண்ட மணிப்புயனே பிரம்பூரா நந்தரங்கா
உன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனையா மிடங்கண்டோ மெழினரையான்
வலத்தே கண்டோம்
பொலங்கொண்ட மணிமாட மீமிசையிற் புயல்தவழும்
புதுவை யென்னுந்
தலங்கண்டோம் நினதுநகை முகங்கண்டோ மினிவேண்டுந்
தனங்கண் டோமே."

[உலம்—கற்றூண். நரையான்—நாரை; காகமுமாம் இவை வலமாவதும் கருடனிடமாவதும் நற்சகுனம். பொலம்—பொன். தனம்—செல்வம்.]

பிள்ளையை இராமகவிராயர் பாடியது:—

"கார்படைத்த கரதலத்தான் துரைதிருவேங் கடனளித்த
கன்று வெக்கும்

பேர்படைத்த வாநந்த ரங்கமகி பாலாநின்
பிரம்பூர் நாட்டில்
நேரிழைக்கு விழியேழு முலையாறு காதைந்து
நெற்றி நான்கு
பாரிடத்தி லிப்புதுமை கண்டுவந்தேன் இதன்பயனைப்
பகர்ந்தி டாயே.''

[கார்—மேகம். கரதலம்—கை; கொடைக்கை யென்றவாறு. கன்னன்—கர்ணன்; வள்ளல்களுளொருவன். பேர்—கீர்த்தி. மகிபாலன்—அரசன். நேரிழை—கன்னி (பன்னிரண்டு ராசிகளுள் கன்னியா ராசியை யுணர்த்திற்று). விழி வழு—கண்கள் கன்னிக்கு ஏழாம் ராசியாகிய மீனம் என்றவாறு. முலை யாறு—தனம் கன்னிக்கு ஆறும் ராசியாகிய கும்பம் என்றபடி; காதைந்து—காதுகள் கன்னிக்கு ஐந்தாவது ராசியாகிய மகரத்தையுடையன; மகர குண்டலங்களை யணிந்த காதுகள் என்றபடி. நெற்றி நான்கு-நெற்றி கன்னிக்கு நான்காம் ராசியாகிய தநுசு; அதாவது நெற்றி வில்லைப் போன்ற வளைவுள்ளது என்றவாறு. பயன்—பொருள்.]

இதனைக் கேட்ட பிள்ளை தன் சமீபத்திலிருந்த மதுர கவிராயரை நோக்கி இக்கவியின் கருத்தியாதென்று வினவ, அதற்கு அவர் இதனைத் திருப்பிப் பாடுகிறேன் என்று கூறித்தாமோர் கவி செப்பினர்.

''தங்கவரை மார்பா துரைரங்க பூபதியே
யிங்கோர் புதுமை யியம்பக்கேள் – பங்கயக்கை
ஆயிழைக்கு நான்குநுத லைந்துகுழை யாறுமுலை
மாயவிழி யேழா மதி.''

[முற்கவியின் குறிப்பே யிதற்கும் பொருந்தும்.]

ரங்கப்பிள்ளை மீது மதுரகவியார் பாடிய அம்மானைச்செய்யுள்-

''அண்டர் குலதிலக ஞநந்த ரங்கையவேள்
மண்டலம தானமுக மதியங்கா ணம்மானை!
மண்டலம தானமுக மதியமே யாமாகிற்
கொண்ட வநஜங் குவியாதோ வம்மானை!
குவியுங் கரவநஜங் குளத்திலே யம்மானை!

[அண்டர்—இடையர். ஆநந்தரங்கன் இடையர் குலத்தவன் என்பதறிக. மண்டலமதான முகம்—இந்நிலவுலகத்துள்ள முகம்; ஒளி வட்டத்தையுடைய முகம் என்றும் பொருள்படும். மதியம்-சந்திரன். கொண்ட—சூழ்ந்துள்ள. வநசம்—தாமரை. கரவநஜம்—கைத்தாமரை. குளம்—தடாகம்; நெற்றி. ஆநந்தரங்கனின் முகசந்திரனைக் கண்ட கரகமலங்கள் குளத்திற் (நெற்றியிற்) குவியும், அதாவது, அவனைக் கண்டோர் அஞ்சலி செய்வார் என்றவாறு]

இராமகவிராயர் தமதூர்க்குப் போகவேண்டுமென்று பிள்ளையிடம் அவசரமாக விடை கேட்க, அப்பொழுது பிள்ளை 'ஏன் பறக்கிறீர்? மெதுவாகப் போகக்கூடாதா?' என்றபொழுது கவிராயர் கூறிய கவி:

"கொக்குப் பறக்கும் புறாப்பறக்குங்
குருவி பறக்குங் குயில்பறக்கும்
நக்குப் பொறுக்கி களும்பறப்பர்
நானேன் பறப்பே னராதிபனே!
திக்கு விஜயஞ் செலுத்தியுயர்
செங்கோ னடாத்து மரங்காநின்
பக்க மிருக்க வொருநாளும்
பறவேன் பறவேன் பறவேனே"

[நக்குப்பொறுக்கி—எச்சிற்கல்லை பொறுக்குவோர். பக்கம்—பக்ஷம்.]

இதனைக் கேட்டதும் ரங்கப்பிள்ளை மகிழ்ந்து வேண்டிய பரிசளித்தபோது கவிராயர் மகிழ்ந்து பாடியது:

"காராறு திங்கள் சொரிதலு மில்லை, கவின்கொளுமிப்
பாராறும் நீத்தம் வருதல் இன்னாள், செழும்பங்கயமின்
னாரா றுபய பதமான வாநந்த ரங்கன்செங்கை
யீராறு மாதமும் பொன்மாரி பெய்யு மிரவலர்க்கே".

[கார்—மேகம். ஆறுதிங்கள்—அயநம்; ஆறு மாதம். கவின்—அழகு பார்—பூமி. ஆறும்—நதிகளும். நீத்தம்—நீர். பங்கயமின்னார்—இலக்குமி சரஸ்வதியிருவர். ஆறுகளைப்பாறுதற்குரிய; உபய பதம் ஆன-இரண்டு இடங்களான; 'பதம்' பாதம் என்பதன் குறுக்கல் விகாரமாகக் கொள்ளுவாருமுளர், ஈராறு மாதமும்—வருடம் முழுவதும்.]

மதுர கவிராயர் கவிகூறிப் பிரசங்கஞ் செய்யவேண்டிய தின மொன்றில், குறிப்பிட்ட மாலைப்பொழுதில், கவிராயர் சிறிது முன்னுடிப் பிரசங்க மண்டபத்திற்கு வந்துவிட்டனர். ரங்கப்பிள்ளை வரச்சிறிது தாமதித்தது. மண்டபம் சிறிதிருண்டிருந்தமையால், புலவர் மண்டபக்காவற்காரனை நோக்கி, வழக்கமாக ஏற்றும் பெரிய சதிர் விளக்குகளை ஏற்றச் சொல்லினர். காவற்காரன் அலுத்துக் கொண்டவனாய்க் கடுப்போடு அங்கிருந்த பணிப்பெண்ணை நோக்கி, 'விளக்கிலே திரியைக்கொண்டு வந்து போட்டுக்கொளுத்து' என்றுத் தரவு செய்துவிட்டு வெளியே போயினன். இதைக் கேட்ட புலவர் கவியொன்று வரையத்தொடங்கினர். அவ்வமயம், ரங்கப்பிள்ளை தனது நண்பருடன் வந்து சேர்ந்தனன். எழுதிக்கொண்டிருந்த புலவரைப் பார்த்ததும் அவன், "யாதெழுதிக்கொண்டிருக்கிறீர்?" என்று வினவ, அப்பொழுது கவிராயர் கூறியது:

அந்திவெடி முல்லை யரும்பெடுத்து நான்வந்தேன்
விந்தையதா நாயகற்கு மெல்லியலே—சுந்தரஞ்சேர்
செண்டுகட்ட வேண்டுந் திருவிளக்கிலே திரியைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து'.

இந்தக்கவி இவ்வமயத்திற் கூறப்பட்டதோ அன்றோ. இதைப் பற்றிய குறிப்பொன்றும் எட்டியில்லை. ஆயினும் எனது நண்பரும் புதுவைத் தமிழ் வித்துவானுமாகிய மாக்காணம் துரைசாமிப் பிள்ளையவர்கள் மேற்கண்ட செய்தியை எனக்குக் கூறினர்.

(தொடரும்.)

ரா. பலராம ஐயர்,
தமிழ்ப்பண்டிதர், 'செந்தமிழ்க் கழகம்',
கோயம்புத்தூர்.

# குன்றுதோருடல்.

## ஊதியூர் மலை.

சென்ற சஞ்சிகையில் பவானிப் பள்ளத்தாக்கில் உள்ள ஓதி மலையைப்பற்றி எழுதினேம். அப்போது அத்தலத்திற்குத் திருப்புகழ் இருப்பதாகவும் அச்சுப்பதிப்பில் ஓதிமலை என்பதற்கு ஊதிமலை என்று அச்சடித்திருப்பதாகவும் எழுதியிருந்தோம். ஆனால் சில பெரியார்கள் ஊதிமலை என்ற பாடம் சரியானதீ என்றும் அம்மலை தாராபுரம் தாலூக்காவிலுள்ள ஊதியூர்மலை என்பதைக் குறிக்கும் என்றும் சொல்லுவார்கள். ஒருவேளை அவ்வாறு இருக்கும் பக்ஷத்தில் அவ்வூதியூர் மலையைக் குறித்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டியிருப்பதால் அதைப்பற்றி சிறிது எழுதுவோம்.

ஊதியூர்மலை என்பது தாராபுரம் தாலூக்காவில் காங்கேயத்திலிருந்து தாராபுரம் செல்லும் பாதையில் 8-வது கல்லில் இருக்கின்றது. இம்மலை சுமார் $3\frac{1}{2}$ மைல் நீளமும் $1\frac{1}{2}$ மைல் அகலமும் இருக்கும். இதன் உயரம் கடல் மட்டத்தின்மேல் 1275 அடி. இதனை ஊதியூர்மலை என்றும் பொன் ஊதிமலை என்றும் கூறுவார்கள். இதனை கொங்கணகிரி என்றும் கூறுவதுண்டு.

மலையின்மேல் உச்சிப்பிள்ளையார் கோயில் ஒன்று இருக்கின்றது. அதற்குச் சற்று கீழே உத்தண்ட வேலாயுதசாமி ஆலயம் இருக்கிறது. அடிவாரத்தில் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் கொங்கணர் குகை என்ற ஒரு குகை இருக்கிறது. இக்குகை ஒரு மண்குழி. இங்கே கொழுமண் குழி என்ற பெயரோடு ஒரு குகை இருக்கிறது.

முன்காலத்தில் கொங்கண முனிவர் என்ற ஒரு சித்தர் இங்கே வசித்து வந்ததாயும் அவர் மூலிகை மூலமாக பொன் விளைவித்ததாகவும் இப்போதும் அவர் உருவம் அங்கே தென்படுவதாகவும் கூறுவார்கள். அதற்கு திருட்டாந்தமாக அக்குகை வாயிலில் சிறிது மணலைப் பரப்பி வைத்துவிட்டு வந்தால் பின்னல் அம்மணலில் பாதச்சுவடு தெரியுமாம். குகைக்குள் யாரும் சென்றதில்லை. இங்கிருந்து பழனிக்கு ஒரு சுரங்கம் இருப்பதாகக் கூறுவர்.

ஆலயத்தில் உத்தண்ட வேலாயுதர் சுயம்பு மூர்த்தியாக இருக்கிறார். நவராத்திரி, தீபாவளி என்ற இரண்டு உற்சவங்கள் நடக்கும்.

இம்மலையை அனுமார் கொண்டுவந்த சஞ்சீவி மலையின் ஒரு துண்டு என்பார்கள். இம்மலையைப்பற்றி பல கதைகள் உண்டு. ஒரு வேடன் ஒரு முயலைப் பிடித்து வேகவைத்து ஒரு குச்சியால் கிளர அம்முயல் உயிர்பெற்று எழுந்து ஓடிற்றும். அது குச்சியின் மகிமை என்று நினைத்து அதைத்தேட அது மாயமாய் விட்டதாம். அதற்காக தவம் செய்து சித்தர் ஆனவர் கொங்கண முனிவர் என்பார்கள்.

பல்லடம் தாலூக்காவிலும் கொங்கணகிரி என்று ஒரு ஆலயத்தைக் கூறுவதுண்டு. இக்கொங்கண கிரிக்குத் திருப்புகழ் ஒன்றுண்டு. அது அடியில்கண்டபடி:

ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை வருள்வாயே—
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன மருள்வாயே.
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி யருள்வாயே—
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனே யருள்வாயே;
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே—
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரக்ஷபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே;
கொங்கினுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே—
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே.

—கோவைக் கிழார்;

# ஒழிபு.

## கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள்.

---

## பேளூர் ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் ஆலயம்.

---

(32-பக்கத் தொடர்ச்சி.)

### கடலை விருஷபமும்—பெயர்க்காரணமும்.

"கடலைப்பசுவன்" என்ற பெயருள்ள விருஷபம் (காளைமாடு) ஒன்று இங்கு நேர்த்தியாகக் கல்லில் செதுக்கப்பட்டு பார்ப்போரைப் பரவசப்படுத்தக் கூடியதாய் விளங்குகிறது. இப்பசுவின் முன்னிலையில் வருத்த கடலையை, ஆலயத்தார்களும் யாத்திரீகளும் படைப்பதால் இவ்விருஷபத்திற்கு "கடலைப்பசுவன்" என்று பெயர் ஏற்பட்டதுபோலும்.

### மகாமண்டபமும்—அதன் சிற்ப நலங்களும்.

மகாமண்டபத்தின் மேல்தளத்தின் உள்ளிடத்தின் நடுமையத்தில் எடுத்துக்கட்டி, அதாவது காற்றோட்டமும் வெளிச்சமும் உண்டாவதற்குச் சதுரவடிவில் கட்டப்படும் மேற்கட்டு இதன் நீளம் ஆறடி, அகலம் பத்தடி. இது அலங்கார சம்பத்தும், சிற்ப விசேடங்களும் நிரம்பிப் பிரகாசிக்கக்கூடிய அற்புத சித்திரக்காட்சிகளையுடையதாயிருக்கிறது. இதன் நடுவில் தொங்க விடப்பட்டிருக்கும் செதுக்குவேலைத் தாமரையின் இதழ்களில் திரிமூர்த்திகளின் திருவுருவங்கள் அழகுபெறச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு புறச்சுவர்களின்மீது இராமாயணக்கதைகள், சித்திர வுருவங்களில்

சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்திற்கு ஆதாரமாகவுள்ள நான்கு தூண்களும் அந்தமிகும் சிற்பங்களைச் சுந்தரமாகப் பெற்றுத்துலங்குகின்றன. இத்தூண்கள் ஒவ்வொன்றின் உச்சியிலும், நான்கு பெண்ணுருவங்கள் நேர்த்தியாகச் சித்தரித்து நிறுத்தப்பட்டிருக்குன்றன. அப்பெண்ணுருவங்கள் நாட்டியமாடுவது போலவும், தலைமயிர் கோதுவது போலவும் இருக்கின்றன.

மதனகி கோம்பைகளும்—திரைச்சீலைச் சித்திரங்களும்.

பேளூர் ஸ்ரீ சென்னகேசவர் கோவிலில் மட்டும் எவ்விடங்களிலும் காணமுடியாத சித்திரத்தூண்களுடன் சேர்த்துச் சித்தரிக்கப்பட்டிருக்கும் மெல்லிய கல்திரைச் சீலைகள், மிகுதியாகவும் அற்புத சித்திரங்களின் சிருஷ்டிகளாகவும் காணப்படுகின்றன. இவற்றிற்கு கன்னட மொழியில் "மதனகி கொம்பெகள்" என்று கூறப்பட்டிருக்கிறது.

இம்மதனகிக் கொம்பெகளின் சித்திரவகையாதெனில்:—

"நேர்த்தியான சித்திரத்தூண்களின் இடையில், கல்லினால் இழைக்கப்பட்ட திரைச்சீலையின் இருவிளிம்புகளிலும், அதாவது இருபக்கத்து ஓரங்களும் தூண்களில் பொருந்தியிருக்கும்படி ஒரு அங்குலக் கனம் 5 அல்லது 6 அடி உயரம் நான்கடி அகலமுடைய மெல்லிய கருங்கல்லை நன்றாக மெருகு தோன்றும்படி சதுரித்து, அதன் நான்கு ஓரங்களிலும், நடுவிலும் நேர்த்தியான சித்திரங்களையும், புராணசம்பந்தமான ஓவியங்களையும் எழில்பெற கைதேர்ந்த சிற்பிகளின் அற்புத வல்லமைகளைக் கொண்டு அழகின் அவதாரங்களென்று கண்டோர் வியந்து களிக்கும்படி சித்திரிக்கப்பட்டிருப்பன. இவைகளின் உருவங்கள் தற்கால ஆங்கில நாகரிகங்களில் பங்களாக்களிலும் அவைபோல் கட்டப்பட்டுள்ள வீடுகளிலும் முன்வாயிலும், கூடங்களின் நடுவிலும் அழகிற்கும், மறைப்புக்கும் வைக்கப்பட்டிருக்கும் ஸ்கிரீன்கள் அதாவது நாகரிக மறைப்புத்தட்டிகள் போன்றவை.

கல்லால் செய்யப்பட்ட திரைச்சீலைகளில் முழு பாகங்களும், தேர்ந்த சிப்பிகளின் சிற்றுளிகளால் சிறு சிறு துவாரங்களாக குடையப்பட்டு அங்ஙனம் குடையப்பட்ட துவாரங்கள் பார்ப்போர் கண்

களுக்கு சாமந்திப்பூ, தாமரைப்பூக்களைப்போலவும், நாற்சதுரம், முக்கோணம், நாற்கோணம் ஐங்கோணம், ஆறுகோணம் முதலியன போலவும் தோன்றும்படியிருக்கின்றன. கற்பனுலங்கார விற்பன விளைவுகளென்று புகழ்ந்து கூறவல்ல சித்திரச்சிலை காட்சிகள் கண் விருந்தாகவே விளங்குகின்றன. கூர்மையான ஆயுதங்களால் குடைந்து சித்திரங்களையும் ஓவியங்களையும் சிறப்பாகக் காட்டவல்ல செய்கைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்பலகைகள்: மைசூர் ஜில்லாவிலுள்ள ஹளபீடுக்கு அருகிலுள்ள "புஷ்பகிரி" என்ற மலையில் கிடைக்கும் "பலப்பம்" என்ற ஒருவகை மாக்கல்கள் இக்கல்கள் சிற்பிகளின் தேவைக்கேற்ற அளவில் மிருதியாக அகப்பட்டு சித்தரித்து சித்திரங்களின் வைப்பு நிதிகளாக விளங்குகின்றன. மேலும் இவைகள் சிற்பிகளின் சிற்றுளிகளுக்கு மிகவும் கீழ்ப்படிந்து அவர்கள் நினைவின்படியெல்லாம் வளைந்து கொடுத்ததனுலேயே சிற்பங்களும், ஓவியங்களும் அற்புதவடிவங்களாக அமைந்து சிறப்பதற்குமாயின. இக்கல்கள் சித்தரிப்பின் பின்னர் கைவல்லாரின் திறமையால் மளமளப்பும், வளவளப்பும் சாணை பிடித்த வைரங்கள்போல் மின்னிப்பிரகாசிக்கின்றன. மகா மண்டபத்தின் நடுவில் மட்டும் கல்லால் செய்யப்பட்ட திரைச்சீலைகள், கல்தச்சர்களின் கைவன்மையையும், செய்வன்மையையும் கண்பெற்ருர் கண்டுகளிக்கும்படி காணப்படுகின்றன. அவற்றின் தொகை இருபது. மனோரம்மியமும், சிற்பத்திறமையும் பெற்று விளங்கும் இவ்விருபது திரைகளும் பெரும்பாகம் புராணகதைகளையும், சிறுபாகம் பெண்ணுருச்சித்திரங்களையும் தன்னுட்கொண்டு திகழ்கின்றன. திரைகளின் கீழும், தூண்களின் அடிப்பீடங்களிலும் அவைகளைச் சித்தரித்த சிற்பிகளின் பெயர்கள் வெட்டப்பட்டுள்ளன. அவைகள்:— "தாஸோஜா," அவர் குமாரன் "சவனன்," சிக்கஹம்பன்," "மல்லண்ணன்," "படாரமல்லோஜா," "கொஞ்சமல்லண்ணன்," மசதநாகோஜா" என்பன. இவர்களில் தலைவன் பெயர், ஜங்கணுசாரி" என்பது. இவன் பேளூரில் பிரசித்தி பெற்ற தலைவன்.

(தொடரும்.)

கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

# மதிப்புரை

## நவீன தர்க்கம்.

இதன் ஆசிரியர் கோயமுத்தூர் கவர்மெண்டு காலேஜ் தத்துவ சாஸ்திர போதகாசிரியர் K. R. அப்ளாச்சாரியார் அவர்கள் உலகத்தில் நாளுக்குநாள் நவீன ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவ்வாராய்ச்சிகளை மக்கள் எல்லாரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். நாகரீகத்தில் முன்னுக்கு வந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் மொழிகளில் நவீன ஆராய்ச்சிகளைக் குறித்து எழுதிவருகிறார்கள். அவ்விதம் நமது தமிழ் மொழியில் எழுதாமலிருப்பது ஒரு பெருங்குறைவு. இக்குறைவை நீக்கவேண்டி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் சில பரோபகாரமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். அவ்வேற்பாடுகளில் முதல் முதலில் நவீன தர்க்கமாகிய ஐரோப்பா நாட்டார்களின் தர்க்க சாஸ்திரத்தை தமிழில்மொழி பெயர்ப்பதை ஏற்றுக்கொண்டு அப்பொருள்பற்றி எழுதும் சிறந்த நூலுக்கு உதவி புரிவதாக வாக்களித்தனர். அதனை அனுசரித்து பல புலவர்கள் நூல்கள் எழுதின வகையில் நமது காலேஜ் ஆசிரியர் K. R. அப்ளாச்சாரியார் அவர்கள் எழுதின இந்நூல் பெரும் புலவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கழகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்நூல் ஒரு சிறந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் விரைவில் விஷயங்களைத் தெரிந்துகொள்ளும்படி சுலபமான நடையில் நாள்தோறும் பழகுகிற உதாரணங்களை வைத்துக்கொண்டு விவரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு அத்தியாயத்திற்கு இறுதியில் சில கேள்விகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவ்வத்தியாயங்களைப் படித்த பிள்ளைகள் அக்கேள்விகளுக்கு விடை கூறத் தெரிந்து கொண்டால் அவ்வத்தியாயத்திலுள்ள பொருள் முழுவதையும் அறிந்துகொள்ளலாமல்லவா? ஐரோப்பியர்களுடைய தர்க்கத்தைப் பற்றி எழுதியிருந்த போதிலும் நமது நாட்டு உதாரணங்களையே அங்கங்கே உதகரித்திருப்பதினால் பிள்ளைகள் வெகு சுலபத்தில் பொருளை அறிந்துகொள்ளமுடியும். கூடிய மட்டில் பிறநாட்டுச் சொற்கள் அப்புறப்படுத்தி தமிழ், வடமொழி இவ்விரண்டின் சொற்களையே உபயோகித்திருக்கிறார்கள். இறுதியில் அரும்பத அகராதியில் ஆங்கில வார்த்தைகளுக்குத் தகுந்த தமிழ் வார்த்தைகள் எழுதியிருப்பது பாராட்டத்தக்கது. நமது ஆசிரியரின் நூல் தமிழ் மக்களுக்கு பேர் உதவியாக இருக்கும். இந்நூலைப்போலவே மற்ற கலை இயல்களும் தமிழில் எழுதப்பட்டால் மிகவும் சிறப்பாக இருக்கும்.